
அப்புறம் அனிதா
- ராஜேஷ்குமார்

# அப்புறம் அனிதா

**- ராஜேஷ்குமார்**

போனஸ் நாவல்

## 1

அனிதா அந்த செவ்வாய்க்கிழமை சாயந்தரம் காலேஜிலிருந்து வீடு திரும்பியபோது-தன் வீட்டு வாசலில் அந்த உயர்ந்த ஜாதிகார் நின்றிருப்பதைப் பார்த்து ஒரு விநாடி அயர்ந்து போனாள். கார் அருகே நின்றிருந்த வெள்ளை யூனிபாஃர்ம் அணிந்த டிரைவர் வெகு தோரணையாய் இருந்தான். அந்த வெளிர் சாம்பல் நிற கார் தன் நெற்றியில் 'என் தாயகம் இத்தாலி' என்று சொல்லியது.

'ஒரு தனியார் கம்பெனியில் எழுநூற்றி சொச்சரூபாய் சம்பளம் வாங்கும் என்னுடைய அப்பாவுக்கு இந்த காரில் வந்திருப்பவர் நிச்சயமாய் சிநேகிதராய் இருக்க முடியாது!' அனிதா காரையும், டிரைவரையும் தன் பார்வையால் குளிப்பாட்டிக் கொண்டே உள்ளே போனாள்.

உள்ளே நுழைகிற அனிதாவைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும். பி.எஸ்.ஜி. கிருஷ்ணம்மாள் காலேஜில் படிக்கும் அனிதா வருகின்ற வருஷம் பி.ஏ.வை ஃபார்ஸ்ட் கிளாசில் பாஸ் செய்யப் போகிறவள். ஒரு ஃபாரின் பிளேடின் கூர்மை அவளுடைய மூளை... க்கு. எந்த நிறத்தில் சேலை கட்டினாலும் அழகாகத் தெரிவாள். எந்த பெண்ணுக்குமே கிடைக்காத ரோஜா நிறம். கண்களைப் பற்றியும், உதடுகளைப் பற்றியும் சொல்ல ஆரம்பித்தால் அப்புறம் கதை நகராது. கழுத்தும், கழுத்தைச் சார்ந்த பிரதேசங்களும், இடுப்பும், இடுப்பைச் சார்ந்த பிரதேசங்களும் ஏக செழிப்பு. அனிதா நிறைய சினிமா



பார்ப்பாள். பிடித்த டைரக்டர் யார் என்று கேட்டால் விட்டலாச்சாரியா என்று சொல்லுவாள். ப்ளேபாய் ஜோக்குகளை பிறர் சொல்லக் கேட்டால் 'உவ்வே' என்று குமட்டுவாள். அனிதாவுக்கு பின்னால் கோவை நகர ரோமியோக்கள் விழுந்து விழுந்து சுற்றினாலும், அவள் யாரையும் காதலிக்காதவள். அப்பா தீர்த்தகிரிக்கும் அம்மா பத்மாவதிக்கும் பத்தொன்பது வருடங்களுக்கு முன்னால் பிறந்த ஒரே சீமந்த புத்திரி.

அனிதா தயக்கமான நடையோடு உள்ளே நுழைந்தாள். அம்மா பத்மாவதி சமையற்கட்டில் நிலைப்படியோடு, வெகு பவ்யமாக நின்று கொண்டிருக்க, அப்பா தீர்த்தகிரி முகத்தில் அரும்பின வியர்வையோடு, தோளில் போட்டிருந்த துண்டை கையில் பிடித்துக் கொண்டு நாற்காலியில் ஒருவித சங்கோஜத்தோடு உட்கார்ந்திருந்தார்.

அவருக்கு எதிரே--

அந்த புதிய மனிதரும், பட்டுப் புடவையில் ஓர் அம்மாளும் தெரிந்தார்கள். பக்கவாட்டு நாற்காலியில் நாகராஜ மாமா தாம்பூல வாயோடு சிவப்பாய் சிரித்துக் கொண்டிருந்தார்.

அனிதா உள்ளே நுழைந்ததும்--

பேசிக் கொண்டிருந்த எல்லோரும் மௌனமானார்கள்.

அனிதா யாரையும் ஏறிட்டுப் பார்க்காமல் சமையலறையை நோக்கி விடுக்கென்று நடந்தாள். புத்தகக்கட்டை மார்போடு இறுக்கிக் கொண்டாள்.

''அம்மா...அனிதா...''

அவளுக்குப் பின்னால் அப்பாவின் குரல் எழுந்தது.

அனிதா நின்றாள்.

''என்னப்பா...?'' தலை குனிந்தேயிருந்தது.

''இப்படி வாம்மா...''

வந்தாள்.

''இவதான் எங்க பொண்ணு... அம்மா அனிதா, நமஸ்காரம் பண்ணிக்கோம்மா..ஃ'' தீர்த்தகிரி சொல்ல - கையில் இருந்த புத்தகக்கட்டை சுவரோரமாய் வைத்து விட்டு கருஞ்சிவப்பு நெயில் பாலீஸ் தீட்டப்பட்ட

கைவிரல்களைக் குவித்து எதிரே இருந்த அந்த பெரியவரையும், அந்த அம்மாளையும் நமஸ்கரித்தாள்.

''இப்படி வந்து உட்காரம்மா...'' மஞ்சள்பூசிய முகத்தில் குங்குமப் பொட்டு பிரகாசிக்க, நரையோடிய தலையில் உட்கார்ந்திருந்த அந்த அம்மாள் மெல்லிய குரலில் கூப்பிட்டாள்.

அனிதா மருள்கின்ற பார்வையோடு தன் அம்மாவை திரும்பிப் பார்த்தாள். பத்மாவதி போகும்படி சைகை காட்டினாள். அனிதா மெல்ல நடந்து போய் அந்த அம்மாவின் அருகில் நின்றாள்.

''உட்காரம்மா...''

உட்கார்ந்தாள்.

அந்த அம்மாள் அனிதாவின் தோளைத் தொட்டாள். ''இப்ப தான் காலேஜிலிருந்து வர்றியாம்மா...?''

'ஆமாம்' என்கிற மாதிரி தலையசைத்தாள் அனிதா.

''காலேஜிலிருந்து வீட்டுக்குளப்படி வருவே...?''

''பஸ்''

அந்த அம்மாள் புன்னகைத்தாள். ''நீ பேச்சுப் போட்டியில் நிறைய பிரைஸ் வாங்கியதாக உங்க அப்பா சொன்னார். நீ எங்கிட்ட பேசறதுக்கு இவ்வளவு வெக்கப்படறியேம்மா.''

அதுவரைக்கும் பேசாமல் இருந்த அந்தப் பெரியவர் குறுக்கிட்டார். ''நாம எதுக்காக வந்திருப்போம்ன்னு உன்னோட மருமகப் பொண்ணுக்கு தெரிஞ்சு போச்சோ என்னவோ... அது தான் வெட்கப்படறா.''

சரக்கென்று தலைநிமிர்ந்தாள் அனிதா.

குப்பென்று உடம்பு பூராவும் ஒருமுறை வியர்த்து அடங்கியது.

'என்ன சொல்கிறார்கள் இவர்கள்?'

'என்னை பெண் பார்க்கவா வந்திருக்கிறார்கள்?'

பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்திருந்த நாகராஜ மாமா சிரித்தார். வெற்றிலைச்சாறு திவலைகளாய் சிதறியது. ''அதுதான் பெண்ஜென்மத்தோட கெமிக்கல் ரியாக்ஷன். இந்த வெட்கம் கொல்லங்குடி கருப்பாயிலிருந்து இங்கிலாந்து நாட்டு ராணி வரைக்கும் சாசுவதம்.''



எல்லோரும் சிரிக்க-அனிதா வெட்கித்துப் போய் எழுந்து -அம்மாவை நோக்கி ஓடி -சமையலறையில் ஒளிந்தாள். பத்மாவதி சிரிப்போடு உள்ளே வந்தாள்.

''ஏண்டி... ஓடி வந்துட்டே...?''

''யாரம்மா... அவங்க...?''

''அப்பாவோட ஃப்ரெண்ட் நாகராஜ மாமாவுக்கு தெரிஞ்சவங்களாம். போன மாசம் நடந்த அழகிப் போட்டியில் நீ 'மிஸ் காலேஜ்' பட்டம் வாங்கினதையும், உன்னோட போட்டோவையும் பேப்பர்ல பார்த்தாங்களாம். நாகராஜ மாமா மூலமா அவங்க பையனுக்கு உன்னை பெண் கேட்டு வந்திருக்காங்க...''

அனிதா நெற்றியை லேசாய் விரித்தாள்.

''இப்ப எதுக்கும்மா எனக்கு கல்யாணம்... படிப்பு முடியட்டும்... டிகிரி வாங்கி ஏதாவது ஒரு வேலைக்குப் போய்... அப்பாவோட சுமையை குறைச்சி...''

அனிதா பேசப் பேச நாகராஜ மாமா சமையலறைக்குள் உரிமையோடு நுழைந்தார். ''என்னம்மா அனிதா அப்பாவோட சுமையைக் குறைக்கப் போறியா...? உங்கப்பாவுக்கு இனிமே கஷ்டமே இருக்கக் கூடாதுனு தான் ஆண்டவனாப் பாத்து இந்த சம்பந்தத்தை இந்த வீட்டுக்கு அனுப்பிச்சுவெச்சிருக்கார்... வந்திருக்கிறவங்க யார் தெரியுமா? மும்பை மாதுங்கா ஏரியாவில் பெரிய புள்ளி. தாராவியில் ரியல் எஸ்டேட்டும், அம்பர்நாத் எக்ஸ்டென்ஷன்ல காப்பர் கம்பி தயாரிக்கிற ஃபேக்டரியும், குர்லா மகாவீர் பந்தர் ரோட்ல நாலைஞ்சு கட்டடமும்... ஏக அமோகம். லட்சுமி நாராயணன்னு சொன்னா பாதி பம்பாய்க்கு தெரியும். அவங்க சம்சாரம் கமலம் பெரிய குடும்பத்துல சம்பந்தப்பட்டவங்க. இவங்களோட பையன் பிருதிவ்... எலக்ட்ரானிக் என்ஜினியரிங் படிச்சுட்டு அப்பாவுக்கு உதவியா இருக்கிறான். பையனோட போட்டோவை பாக்கிறியா அனிதா...? பார்த்தா அசந்து போயிடுவே.''

பேசிக் கொண்டே தன் உள்ளங்கையில் மறைத்து வைத்திருந்த அந்த பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை நீட்டினார் நாகராஜ மாமா.

பத்மாவதி அந்த போட்டோவை வாங்க கையை நீட்டினாள். ''போட்டோவை என்கிட்ட குடுங்கண்ணா. நீங்க காட்டினா அவ பார்க்க வெக்கப்படுவா...''

''அப்படியா... நீயே காட்டம்மா...''

போட்டோவைக் கொடுத்துவிட்டு நகர்ந்தார் நாகராஜ மாமா. அவர் நகர்ந்ததும் அனிதா, பத்மாவதியை ஏறிட்டாள்.

''அம்மா...! இப்போ எனக்குக் கல்யாணம் வேண்டாம்மா...''

''ஏண்டி...?''

''நான் படிக்கணும்.''

''வந்திருக்கிற குடும்பம் ஐஸ்வர்யக் குடும்பம்... அனிதா. அவங்களே பிரியப்பட்டு வந்திருக்காங்க. பையன் போட்டோவில் ராஜகுமாரனாட்டம் இருக்கான்... நாகராஜ மாமாவுக்கு தெரிஞ்ச குடும்பம்... அவர் ஒண்ணு சொன்னாருன்னா அது ரொம்பவும் தெளிவா இருக்கும். படிச்சு என்ன பண்ணப் போறே...?''

''அம்மா! எனக்கு கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைச்சாலே ரொம்பவும் பயமாயிருக்கு. இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமேம்மா...''

பத்மாவதி சிரித்தாள்.

''ஆரம்பத்தில் அப்படி தான் இருக்கும்... போகப் போக சரியாயிடும். இந்தா போட்டோவை பாரு. பையனை பிடிச்சிருக்கா, இல்லையான்னு பட்டுன்னு சொல்லணும்.''

போட்டோவை பார்த்தாள் அனிதா. அதில் இருந்த 'பிருதிவ்' அவளை குறும்பாகப் பார்த்தான்.

''எப்படி இருக்கிறான் பையன்?''

''நல்லா தான் இருக்கார்...''

''ஏண்டி அப்படி சலிச்சுட்டு சொல்றே...? நேர்ல மாப்பிள்ளை பையன் இன்னும் நல்லா இருப்பானாம்.

''பத்மா...''

''வந்துட்டேங்க...''

அவர்கள் புறப்பட காத்துக்கொண்டிருந்தார்கள். பத்மாவதியை பார்த்ததும் சொன்னார்கள், ''அப்போ... நாங்க... போயிட்டு வர்றோம்மா... மறுபடியும் அடுத்த



வாரம் பையனோட வர்றோம். உங்க பொண்ணும் நம்ம பையனை நேர்ல பார்த்துரட்டும். அப்புறமா கலந்து பேசி முகூர்த்தத்தை வைச்சுக்கலாம்'' லட்சுமி நாராயணன் சொல்ல பத்மாவதி தலையை ஆட்டினாள்.

கமலமும் கைகூப்பி விடை பெற்றுக் கொண்டாள். நாகராஜ மாமா தாம்பூலச் சக்கையை கடை வாயில் அதக்கிக் கொண்டே கேட்டார்... ''ஏண்டா லட்சுமி நாராயணா... எந்த ஹோட்டல்ல தங்கியிருக்கே...?''

''சிட்டி டவர்...''

''சரி நாளை காலையில் வந்து பார்க்கிறேன்... எத்தனையாம் நம்பர் ரூம்?''

''எழுபத்தாறு... வர்றதாயிருந்தா பத்து மணிக்குள்ளே வாடா... பத்து மணிக்கு மேல வந்தா நான் இருக்க மாட்டேன்... பதினோரு மணிக்கு ஃப்ளைட். மும்பை போறோம்.''

''சரி பத்து மணிக்குள்ளே வந்துடறேன்'' நாகராஜ மாமா தாம்பூலச்சாறு நிறைந்த வாயை அண்ணாந்து கொண்டே சொல்ல, லட்சுமி நாராயணனும் கமலமும் வாசலில் நின்றிருந்த காரை நோக்கிப் போனார்கள்.

காரின் டிரைவர் ஒரு அரண்மனை சேவகனின் பவ்யத்தோடு, காரின் கதவை வெண்ணெய்க் கட்டியாய் திறந்துவிட சீட்டுக்குள் புதைந்தார்கள்.

கார் ஒரு தேர் அசைகின்ற சைஸில் நகர்ந்தது.

ஹோட்டல் சிட்டி டவர்.

எல்லா அறைகளிலும் ட்யூப்லைட் வெளிச்சம் செத்துப் போயிருக்க அந்த டீலக்ஸ் அறையில் மட்டும் மெலிதாய் வெளிச்சம் ததும்பியது.

லட்சுமி நாராயணன் விஸ்கியோடு நாலாவது ரவுண்டில் இருந்தார். எல்லா நரம்புகளிலும், ரத்தக் குழாய்களிலும் கணிசமான போதை ஏறியிருந்தது. அவருக்கு எதிரே உட்கார்ந்து கவலையாய் மோவாயைத் தாங்கியிருந்த அவர் மனைவி கமலம் கேட்டாள்.

''என்னங்க... பொண்ணு வீட்டுக்காரங்க நம்ம பேச்சை நம்பிட்டாங்களா?''

லட்சுமிநாராயணன்போதையோடு அவளைஏறிட்டார்.

''நிச்சயமா நம்பியிருப்பாங்க கமலம்... நீ ஏன் மனசைப் போட்டு குழப்பிக்கிறே...? பேசாமே போய்படு...''

கமலம் போய் படுக்காமல் அவரருகே வந்து உட்கார்ந்தாள். ''அந்த அனிதா பொண்ணைப் பாத்திங்களா? அந்த நிறமும் அந்த உடம்பும் கண்ணைச் சுண்டறா... அவளை ஏனோ தானோ பார்ட்டிகளுக்கு புக் பண்ணவே கூடாது. வி.ஐ.பி.களுக்கு மட்டும் அவளை ரிசர்வ் பண்ணி வெச்சுடணும். இரண்டு வருஷம் கழிச்சி நல்ல விலைக்குப் போவா...''

லட்சுமிநாராயணன் ஐந்தாவது தடவையாக விஸ்கியை வயிற்றுக்குள் வார்த்தார்.

''பொண்ணோட அப்பனும் சரி. அவ அம்மாவும் சரி நம்ம காரைப் பார்த்ததுமே வாயைப் பொளந்துட்டாங்க கமலம்... பிருதிவ்வோட போட்டோவைப் பார்த்தா எந்த பொண்ணுமே சபலப்பட்டு போவா. அனிதாவும் சரின்னு தலையை ஆட்டத்தான் போவுது...''

லட்சுமி நாராயணன் பேசிக் கொண்டே போன அதே வினாடி -

அறையின் கதவை யாரோ தட்டினார்கள்.

''டொக்''

கமலம் எழுந்தாள்.

''யாரது?''

வெளியேயிருந்து குரல் கேட்டது... ''நான்தான்''

லட்சுமி நாராயணன் சொன்னார் ''கமலம் கதவைத் திற! பிருதிவ் தான் வந்திருக்கான்.''

கமலம் கதவைத் திறந்தாள்.

அந்த இளைஞன் உள்ளே நுழைந்தான். மோவாய் பூராவும் கடுமையான தாடி பயிராகியிருக்க தலையில் தொப்பி மாட்டி இருந்தான். கண்களுக்கு ஒரு மெலிதான நீல நிறத்தில் கூலிங்கிளாஸை கொடுத்திருந்தான். பழுப்பு நிறத்தில் ஸபாரி டிரஸ்ஸில் டிரிம்மாய் தெரிந்தான்.

சாயங்காலம் அனிதாவுக்கு பாஸ்போர்ட் சைஸில் காட்டப்பட்ட அதே இளைஞன்.

''வா பிருதிவ். பார்ட்டியை போய் பார்த்தாயா?''



''பார்த்தேன்பாஸ்... நம்ம பிஸ்னஸுக்கு அந்த பார்ட்டி வரலை... வேற பார்ட்டியைத் தான் நாம் பார்க்கணும்...''

பிருதிவ் சொல்ல கமலம் குறுக்கிட்டாள். ''இதோ பார் பிருதிவ். உனக்கு கல்யாணம் முடியும்வரை - அவரை பாஸ்ன்னு கூப்பிடாதே... அப்பான்னு கூப்பிடு.''

''எனக்கு ஞாபகமிருக்கு மேடம். யாராவது கூட இருக்கும்போது அப்படி கூப்பிடுவேன். இந்த நிமிஷம் நம்ம மட்டுந்தானே இருக்கோம்?''

லட்சுமி நாராயணன் சிரித்தார்.

''பிருதிவ்! அந்த அனிதா போட்டோவில் பார்த்ததைக் காட்டிலும் அமர்க்களமாகவே இருக்கா... எவன் பார்த்தாலும் இமையைக் கொட்டறதுக்கு ஐந்து நிமிஷம் ஆகும். இந்த அனிதாவுக்கு என்ன விலை சொன்னாலும் சேல் ஆயிடுவா.''

பிருதிவின் விழிகளில் ஆர்வம் ஜிகினாத் தாளாய் பளபளத்தது.

''அனிதாவோட ஃபாதரும் மதரும் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாங்களா பாஸ்?'';

''ம்... ஒத்துக்கிட்ட மாதிரித்தான். அடுத்த வாரம் உன்னை கூட்டிட்டு வர்றதா சொல்லியிருக்கேன். மூஞ்சியை கொஞ்சம் சுத்தமா வெச்சுக்க. இந்த தாடி மீசையை எடுத்திடு. மேல் நாட்டுத்தனமா டிரஸ் பண்ணிக்க...''

''எஸ்பாஸ்...''

''நாளை காலை பத்து மணிக்கு போயிங்ல நாம மும்பை போறோம். போயிட்டு ஒருவாரம் கழிச்சு நாம திரும்பிவர்றோம்.''

''ஓ... கே... பாஸ்...''

தலையாட்டினான்பிருதிவ்.

''நான்என்னோட ரூமுக்கு போறேன்பாஸ்.''

''விஸ்கி சாப்பிடுறியா?''

''வேண்டாம் பாஸ்!''

''ஏன் வேண்டாங்கிற? அனிதா என்ற ஒரு அழகான புள்ளிமான் நம்ம கையில் மாட்டப் போகுது... அதைக் கொண்டாட வேண்டாமா? ஒரு பெக் ஊத்தி தர்றேன்.

அடிச்சுட்டு போய்படு...ம்...வா...உட்கார்..."

பிருதிவ் தயக்கமாக வந்து உட்கார்ந்தான்.

கமலம் புன்னகையோடு தன் கணவனைப் பார்த்தாள்; கேட்டாள்...

"எனக்கும் ஒரு பெக்."

"தர்றேன்... வா... நீயும் இப்படி வந்து உட்கார்..."

மூன்று பேரும் முக்கோண வடிவத்தில் உட்கார்ந்து கொள்ள, லட்சுமி நாராயணன் விஸ்கியை டம்ளர்களில் வார்க்க ஆரம்பித்தார். போதையில் அவர் உதடு கோணியது.

"பிருதிவ்."

"பாஸ்."

"அனிதாவுக்கு என்ன விலை வைக்கலாம்?"

"நான் இன்னும் அனிதாவை நேர்ல பாக்கலை பாஸ்."

"அடுத்த வாரம் நீ பார்க்க போறே... அப்ப சொல்லு. கமலம்."

"என்னங்க?"

"நீ சொல்லு அனிதா என்ன விலைக்குப் போவா?"

கமலம் சிரித்தாள்.

"போன மாசம், நம்மகிட்ட மாட்டின அந்த வைசாலிய இருபத்தஞ்சாயிரத்துக்கு கொல்கத்தா ரன்சோட் தாஸுக்கு வித்தோம். அனிதாவுக்கு முன்னாடி வைசாலி குப்பை. அனிதாவுக்கு ஒரு லட்சம் சொல்லலாம்.

"அதே ஒரு லட்சத்தைத்தான் நானும் நினைச்சுட்டிருந்தேன்." லட்சுமி நாராயணன் சொல்ல கமலமும், பிருதிவ்வும் சோடா கலந்த விஸ்கி டம்ளர்களை எடுத்து பரஸ்பரம் சியர்ஸ் சொல்லி சாப்பிட்டார்கள்.

அதே விநாடி...

ஒரு லட்ச ரூபாய்க்கு விலை பேசப்பட்ட அனிதா தன் வீட்டு படுக்கையில் புரண்டபடி போட்டோவில் பார்த்த பிருதிவின் உருவத்தை இனிப்பாய் அசை போட்டுக் கொண்டிருந்தாள்.

மகளுக்கு ஒரு நல்ல வரன் அமையப் போகிற



சந்தோஷத்தில் - வெகு நாளைக்குப் பிறகு தீர்த்தகிரியும், பத்மாவதியும் நிம்மதியாய் தூங்க ஆரம்பித்தார்கள்.

அந்த இரவு மட்டும் கவலையோடு நகர்ந்து கொண்டிருந்தது.

## 2

மறுநாள் காலை ஆறு மணி.

கதவைத் தட்டும் சத்தம் கேட்டு படுக்கையிலிருந்து கண் விழித்து புரண்டார் லட்சுமி நாராயணன். முந்தைய ராத்திரி சாப்பிட்ட விஸ்கி தலையின் பின் பாகத்தில் கனமாய் ஏறியிருந்தது. விழிகள் இரண்டும் மிளகாய் அரைத்து பூசின மாதிரி எரிச்சல்.

அருகில் படுத்து தூங்கிக் கொண்டிருந்த மனைவி கமலத்தின் தோளைத் தட்டினார்.

"கமலம்... கமலம்!"

"ம்."

"கதவை யாரோ தட்டறாங்க... எந்திரிச்சு போய் பாரு"

கமலம் கலைந்த குங்குமப் பொட்டோடு கொட்டாவி விட்டுக் கொண்டே எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

நாகராஜ மாமா நின்றிருந்தார். அந்நேரத்துக்கே குளித்து நெற்றியில் திருநீறோடு - பளிச்சென்ற வேஷ்டி சட்டையில் இருந்தார். வாயில் தாம்பூலச்சாறு லிப்ஸ்டிக் தீற்றின மாதிரி தெரிந்தது. கமலத்தை பார்த்ததும் புன்னகைத்தார்.

"என்னம்மா... லட்சுமி நாராயணன் இன்னமும் தூங்கறானா?"

"வாங்க... உள்ளே வாங்க... இப்பதான் எந்திரிச்சார்."

"வாடா நாகராஜா..." லட்சுமி நாராயணன் மனசுக்குள் எரிச்சல் பட்டுக்கொண்டே வேண்டா வெறுப்பாக புன்னகைத்து வரவேற்றார்.

நாகராஜ மாமா உள்ளே வந்து உட்கார்ந்தார். கையிலிருந்த தாம்பூலப் பெட்டியைத் திறந்து, பாக்கு ஒன்றை வாயில் போட்டு 'கட்டக்' என்று கடித்தார். வெற்றிலையைத் தேடினார்.

"மும்பைக்கு எத்தனை மணிக்கு போறே?"

''பதினொரு மணிக்குப் ப்ளேன். பத்து மணிக்கெல்லாம் ஏர்போர்ட் போயிடணும்...''

''அனிதாவை உங்களுக்கு புடிச்சிருக்கா, இல்லையா?''

''பொண்ணு அம்சமா இருக்கா! எனக்கும் கமலத்துக்கும் ரொம்ப பிடிச்சிருக்கு. பையன் பிருதிவ்க்கும் பிடிச்சுட்டா முகூர்த்தத்தை ஃபிக்ஸ் பண்ணிட வேண்டியதுதான்...''

''பிருதிவ் வந்து பார்க்க வேண்டிய அவசியமே இல்லிங்க... அவனுக்கேத்தமாதிரிதான் அனிதா இருக்கா. பேசாம இப்பவே வெற்றிலை பாக்கு மாத்திக்கிட்டு முகூர்த்த தேதியை நிச்சயம் பண்ணிட்டு போயிடலாம்.''

நாகராஜ மாமா வெற்றிலைக் காம்புகளைக் கிள்ளி - வெற்றிலை உடம்பு பூராவும் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டே ''டேய் லட்சுமி நாராயணா... நீ முன்னைக்கு இப்போ எவ்வளவு உயரத்துக்கு போயிட்ட.... இருந்தாலும் ஒரு சாதாரண நடுத்தர குடும்பத்துப் பெண்ணை, மருமகளாக்கிக்க முன் வந்திருக்கே... நீ தேர்ந்தெடுத்திருக்கிற இடம் ரொம்பவும் சாதாரணமான இடம். இன்னிக்கு இருக்கிற நிலவரப்படி ஒரு சவரன் தங்கம் கூட அவங்ககிட்ட கிடையாது. அவங்க அஸெட் பூராவும் அனிதா தான்...''

''தெரியுமே... நாகராஜா, நீதான் ஏற்கெனவே அவங்க ஃபேமிலியைப்பத்தி டீட்டெய்லா சொல்லிட்டியே. திரும்பவும் ஒருவாட்டி சொல்லணுமா என்ன? எங்களுக்கு வேண்டியது அழகும், புத்திசாலித்தனமும் நிரம்பிய ஒரு மருமக... அந்த ரெண்டு தகுதியும் அனிதாகிட்ட இருக்கு. எங்களுக்கு அது போதும்.'' லட்சுமி நாராயணன் தன் மீசையை வருடிக்கொண்டே சொன்னார்.

நாகராஜமாமா சுண்ணாம்பு தடவிய வெற்றிலைகளை ஒரு ரசனையோடு மடித்து வாய்க்குள் தள்ளினார்.

''எனக்கு உன்னைப்பற்றி தெரியுண்டா லட்சுமி நாராயணா. இருந்தாலும் தீர்த்தகிரி - அனிதாவோட அப்பா ரொம்பவும் பயப்படறான். இப்போ சீர்செனத்தி, வரதட்சணை வேண்டாம்னு சொல்லிட்டு, பொண்ணோட கழுத்திலே தாலி ஏறின பின்னாடி நீ



வம்பு பண்ணுவியோன்னு பயப்படுறான்.''

கமலமும் லட்சுமிநாராயணனும் சிரித்தார்கள்.

''பொண்ணுங்களைப் பெத்த ஒவ்வொருத்தருமே இப்படித்தான் பயப்படறாங்க... அனிதாவோட அப்பாவுக்கு நாங்க அப்படி கேப்போம்னு சந்தேகம் இருந்தா ஒரு காரியம் செய்யலாம்!''

''என்ன காரியம்?''

''வரதட்சணை, சீர் எதுவுமே டிமாண்ட் பண்ண மாட்டோம்னு எழுதித் தந்துடட்டுமா...? வேணுமின்னா கேட்டுச் சொல்லு.''

''சேச்சே... அதெல்லாம் வேண்டாம்டா! நீ சொன்ன வார்த்தையே போதும், தீர்த்தகிரியை நான் சமாதானப்படுத்திடறேன்... அப்புறம் இன்னொரு விஷயம் லட்சுமி நாராயணா. அந்த அனிதா பொண்ணு ரொம்பவும் சென்ஸிடிவ் டைப்... யாராவது ஒருத்தர் சின்ன வார்த்தையை கோபமாக சொன்னால்கூட தாங்கமாட்டா. சிகரெட் புகைமூஞ்சில பட்டா போதும், மயக்கமாயிடுவா. மும்பை சொசைட்டிக்கு அனிதா பொருத்தமில்லாத பொண்ணு.''

கமலம் சொன்னாள்.

''மும்பைக்கு போனதும் ஒரே மாசத்துல அனிதா அந்த சொஸைட்டிக்கு ஏத்த மாதிரி... மாறிடுவா... அவ மாறலைன்னாலும் அந்த சொஸைட்டி மாத்திடும்...''

திடீரென்று நாகராஜமாமா மூக்கை சுளித்தார், லட்சுமி நாராயணனிடம் மெதுவான குரலில் கேட்டார்.

''என்னடா... ராத்திரி குடிச்சியா?''

''இல்லையே...''

''பொய் சொல்லாதே. வாசம் வருது.''

''அதுவா... பிஸினஸ் பார்ட்டி ஒருத்தன் நேத்தைக்கு ராத்திரி வந்து பீர் சாப்பிட்டான், கை தவறுதலாக ஒரு பீர் பாட்டிலை போட்டு உடைச்சுட்டான். ஃப்ளோரை சுத்தமா வாஷ் பண்ணியும் கூட வாசம் போகலை. நான் அந்த சனியனை தொடறதேயில்லை...''

லட்சுமி நாராயணன் சொன்ன பொய்யை சுலபமாய் நம்பிக் கொண்டு எழுந்தார் நாகராஜமாமா.

"அப்ப நான் புறப்படறேன். லட்சுமி நாராயணா... நீ மும்பை போயிட்டு பையனைகூப்பிட்டுக்கிட்டு திரும்ப எப்பவர்றே?"

"வர்ற வாரம் இதே கிழமை..."

"நேரம்?"

"சாய்ந்திரம் அஞ்சுமணி."

"தீர்த்தகிரிகிட்டே சொல்லிடட்டுமா...?"

"ம்... சொல்லிடு..."

நாகராஜ மாமா தாம்பூல வாயை குதப்பிக் கொண்டே புறப்பட்டார். அவர் புறப்பட்டுப் போனதும், கதவை தாழிட்டு வந்த கமலம், லட்சுமி நாராயணனைப் பார்த்து சீறினாள். "நீங்க ராத்திரி குடிச்ச விஸ்கி இன்னமும் உங்ககிட்ட இருந்து நாறுது. ஓவரா குடிச்சாலே இப்படித்தான்."

"நான் என்ன செய்யட்டும் கமலம்? அந்த நாகராஜனுக்கு கழுகு மோப்பம்..."

"அப்படீன்னா இந்த கல்யாணம் முடியிறவரைக்கும் குடியை நிப்பாட்டுங்க. கோயமுத்தூர் வந்தா அதை தொடவே தொடாதீங்க. நீங்க குடிக்கிற விஷயம் பொண்ணு வீட்டுக்குத் தெரிஞ்சா அப்பாவுக்கு இருக்கிற குடிப்பழக்கம் மகனுக்கும் இருக்குமோன்னு சந்தேகப்படுவாங்க. குடிப்பழக்கம் மட்டும் தான் இருக்கா, வேற பழக்கம் ஏதாவது இருக்கான்னு நம்பளைப் பற்றி கிளறஆரம்பிப்பாங்க. பொண்ணுவீட்டுக்காரங்கயாராவது ஒருத்தர் மும்பைக்கு வந்து உங்க பேரைச் சொல்லி விசாரிக்க ஆரம்பிச்சா வேறவினையே வேண்டாம். செமத்தியா மாட்டிக்குவோம்."

"ஓ...கே... இனிமே நான் கோயமுத்தூர் வந்தா காந்தி வேஷம் போட்டுக்கிறேன். போதுமா?" லட்சுமிநாராயணன் சொல்லிக் கொண்டே பாத்ரூமை பார்த்து போனார்.

கமலம் ப்ரேக்ஃபாஸ்ட் தயாரிப்பதில் பிசியானாள். ~~

அனிதா காலேஜுக்கு கிளம்பிக்கொண்டிருந்தாள். கண்ணாடி முன்னால் நின்று நெற்றிப் பொட்டை சரி



செய்து கொள்ளும் போதும் சரி அம்மா பத்மாவதி தட்டில் போட்ட அதிகமான இரண்டு இட்லிகளை சாப்பிடும் போதும் சரி அனிதா மனசில் பிருதிவ்வின் போட்டோ அழுத்தமாய் ஒட்டியிருந்தது.

"அம்மா போயிட்டு வர்றேன்."

மார்புக்கு அணை கொடுத்த கையில் ஏந்திய புத்தகக் கட்டோடு வாசற்படி இறங்கி நடந்தாள் அனிதா.

"அனிதா."

"என்னம்மா?"

"உன்னோட ஞாபகம் எங்கேடி இருக்கு?"

"ஏம்மா?"

"செருப்பை போட்டுக்க மறந்து உம்பாட்டுக்கு போறியே?"

"ஸாரிம்மா. காலேஜுக்கு போற அவசரம்..."

பத்மாவதி தனக்குள் சிரித்துக் கொண்டாள் "ஏண்டி பொண்ணே. உனக்கு காலேஜுக்கு அவசரமா, கல்யாணத்துக்கு அவசரமா? மாப்பிள்ளை பையன் வந்து பாத்துட்டு போனதும் - பக்கத்து முகூர்த்த தேதியை நிச்சயம் பண்ணவேண்டியதுதான்."

அனிதா மறுபடியும் உள்ளே வந்து காலுக்கு ஸ்லிப்பர்களை மாட்டிக் கொண்டாள், "நான் வர்றேம்மா" குனிந்து கொண்டு அம்மாவிடம் சொன்னாள்...

அவள் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்த நேரம்--

வீட்டின் வாசலில் ஆட்டோ ஒன்று வந்து நிற்க, தோளில் மாட்டிய ஜோல்னா பையோடு அந்த இளைஞன் இறங்கினான். மாநிறம். தூக்கி சீவிய கிராப். தடிமனான மூக்குக் கண்ணாடி, மீசையில்லாத மேலுதடு. தாடி இல்லாத மோவாய்... வெள்ளை நிற ஜிப்பாவும், குர்தா மாதிரி பேண்ட்டும் போட்டு நெற்றியில் சந்தனப் பொட்டோடு தெரிந்தான்.

"அடடே... ரமேஷ் அத்தான்."

அனிதா மலர்ந்தாள். தாழ்வாரத்தினின்றும் எட்டிப் பார்த்த பத்மாவதி புன்னகையோடு "வாப்பா... ரமேஷ்..." என்றாள்.

அந்த ரமேஷ் ஜோல்னா பையை தன் இடது

புஜத்திலிருந்து, வலது புஜத்திற்கு மாற்றிக் கொண்டபடியே அனிதாவை ஏறிட்டான்... ஆரோக்கிய மானபல்வரிசை தெரிய சொன்னான்.

"கங்கிராட்ஸ் அனிதா..."

"எதுக்கு...?"

"அழகுப் போட்டியிலே மிஸ் காலேஜ் பட்டம் வாங்கினதுக்காக."

"இது ரொம்பவும் ஓல்ட் நியூஸ் ரமேஷ்."

"எனக்கு நேத்தைக்குத்தான் தெரிஞ்சது."

"திருநெல்வேலி ஜில்லாவில் சுந்தர பாண்டியம் கிராமத்துல பேப்பரும் பேனாவுமா உட்காந்திட்டிருக்கிற உங்களுக்கு நான் 'மிஸ் காலேஜ்' ஆனது எப்படி தெரியும்?"

"பேப்பரைப் பார்த்துத்தான்..."

அனிதா ரமேஷை நெருங்கி - அவனுடைய தோளில் மாட்டியிருந்த ஜோல்னா பையை எட்டிப் பார்த்து விட்டு கேட்டாள்.

"என்ன ரமேஷ்... புதுசா இப்போ என்ன நாவல் எழுதிட்டிருக்கீங்க...?"

"நீரில் எரியும் தீபங்கள்."

"என்ன சப்ஜெக்ட்?"

"வரதட்சணை கொடுமையாலே கல்யாணமாகாமே கன்னிகளாகவே வாழ்ந்திட்டிருக்கும் பெண்களைப் பத்தின கதை இது. இந்த வருடத்துக்கான சாகித்ய அகாடமி அவார்டை வாங்கப்போற நாவல் இது. ரொம்பவும் கிளாசிகல் தீம்."

"எழுதிமுடிச்சிட்டீங்களா?"

"பாதி எழுதி முடிச்சிட்டேன்."

அனிதாவும் ரமேஷும் பேசிக்கொண்டிருக்கும்போதே பத்மாவதி குளியலறை பக்கமாய் போய் உள்ளே குளித்துக் கொண்டிருந்த தன்னுடைய கணவருக்கு குரல் கொடுத்தாள்.

"என்னங்க...?"

"என்ன பத்மா...?"

"உங்க தங்கச்சி மகன் ரமேஷ் ஊர்லேயிருந்து வந்திருக்கான்..."



"அட ரமேஷா... எப்ப வந்தான்...?"

"இப்பத்தான்..."

பாத்ரூமின் கதவு படீரென்று திறந்து கொள்ள-உள்ளேயிருந்து தலையைத் துவட்டியபடியே வெளியே வந்தார் தீர்த்தகிரி. ஈரம் சொட்ட அவனை நோக்கி நடந்தார்.

"நமஸ்காரம் மாமா..."

"வாடா ரமேஷ்... ரங்கநாயகி எப்படியிருக்கா?"

"அம்மாதானே? அம்மாவுக்கு என்ன மாமா? பூமி விளைகிறது, வாடகைப் பணம் வருகிறது, கடன் வாங்கிட்டுபோன ஊர்ஜனங்ககிட்டேயிருந்து எக்கச்சக்க மான வட்டி வருது. முன்னைக்கு இப்போ ஒரு சுத்து பெருத்துப்போய் நாற்காலியைக்கூட மாத்தியாச்சு..."

அனிதாவும் பத்மாவதியும் சிரித்தார்கள்.

தீர்த்தகிரி மாற்று வேஷ்டியைக் கட்டிக் கொண்டு வேஷ்டியின் நுனியை திரிமாதிரி சுருட்டி காதுக்குள் விட்டு குடைந்தார்.

அனிதா தன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்து விட்டு-பதட்டமாய் வல்துகை விரல்களை உதறிக் கொண்டாள்.

"ஐயையோ பஸ் வர்ற நேரமாச்சு... ரமேஷ் நான் காலேஜ் போறேன். ஈவினிங் வந்து பேசறேன்."

சொல்லிக் கொண்டே வாசலைத் தாண்டினாள் அனிதா.

கையசைத்தான் ரமேஷ்.

தீர்த்தகிரி நாற்காலியை இழுத்துப் போட்டார்... "உட்கார்ரா ரமேஷ்... எத்தனை மணி பஸ்ஸில் புறப்பட்டு எப்ப வந்து சேர்ந்தே...? பத்மா...! மொதல்ல ரமேஷுக்கு காபியை கலந்துட்டு வா... குளிச்சிட்டு அப்புறமா அவன் டிபன் சாப்பிடட்டும்."

பத்மாவதி சமையலறை நோக்கிப் போனாள். ரமேஷ் ஜோல்னா பையை சேரின் நுனியில் மாட்டிக் கொண்டே சொன்னான்...

"நேத்தைக்கு ராத்திரி எட்டு மணிக்கு திருவள்ளுவர்ல ஏறி உட்கார்ந்தேன். விடிய விடிய இடுப்பை ஒடிக்கிற மாதிரி மெதுவா வந்து, அரைமணி நேரத்துக்கு முன்னாடி தான்

கோயமுத்தூர் வந்து சேர்ந்தான்.''

''உன்னோட கதை எழுதற வேலையெல்லாம் எப்படியிருக்கு?''

''ஏதோ போயிட்டுருக்கு மாமா. கனமான எழுத்துக்கு இப்ப யாரும் மரியாதையே தர்றதில்லை... 'கொல்லக் கொல்ல இனிக்குதடா'ன்னு நாவல் எழுதினா அதை ஜனங்க படிக்கிறாங்க. சமுதாய பிரச்னையோட கதை எழுதினா யாரும் சீண்ட மாட்டேங்கிறாங்க.''

''காலத்துக்கு ஏத்த மாதிரி உன்னோட எழுத்தை மாத்திக்க வேண்டியதுதானே...?''

''அந்த மாதிரி எழுதினா அது வேசித்தனம் மாமா...''

தீர்த்தகிரி சிரித்தார்.

''சரி, சரி. உன்னோட கதை விவகாரம் எனக்கு ஒத்து வராது. உங்கம்மா ரங்கநாயகி என்ன சொல்லிவிட்டா? எப்போ கோயமுத்தூர் வர்றாளாம்?''

ரமேஷ் தன்னுடைய ஜோல்னா பையிலிருந்து அந்த பிரவுன் நிற கவரை எடுத்தான். இறுக ஒட்டப்பட்டிருந்த அதன் வாயைத் தடவிக் கொண்டே தீர்த்தகிரியிடம் நீட்டினான்.

''அம்மா உங்களுக்காக தனியா எழுதி அனுப்பிச்ச லெட்டர். இந்த லெட்டர்ல என்ன எழுதியிருக்காங்கன்னு தெரியாதுமாமா...''

தீர்த்தகிரி அந்த லெட்டரை வாங்கிப் பிரித்தார். பார்வையை எழுத்துக்களின் மேல் வீசினார்.

''அன்பிற்குரிய அண்ணன் அவர்களுக்கு,

தங்கை ரங்கநாயகியின் வணக்கம். நான் இங்கு நலம். அங்கு நீங்களும், அண்ணியும், அனிதாவும் நலம் என நம்புகிறேன். நிற்க.

ரமேஷின் கல்யாண விஷயமாக அநேக இடங்களில் பெண் பார்த்தும் எந்தப் பெண்ணையும் அவனுக்குப் பிடிக்காததால், முடிவாக அனிதாவையே அவனுக்கு கட்டி வைக்கலாம் என்கிற மகிழ்ச்சியான முடிவுக்கு வந்து விட்டேன். இந்த முடிவு உங்களுக்கும் அண்ணிக்கும்,



அனிதாவுக்கும் நிரம்ப சந்தோஷத்தைத் தரும் என்று நம்புகிறேன். ஆறு மாதத்திற்கு முன்னால் நான் பேசின பேச்சுகளை மனசில் கொள்ளாமல் அனிதா - ரமேஷ் கல்யாணத்திற்கு சம்மதம் தர வேண்டு கிறேன். பதில் கடிதத்தை ரமேஷிடம் கொடுத்து அனுப்புங்கள்.

உங்கள் பதிலுக்காகக் காத்திருக்கும்

அன்புத் தங்கை

-ரங்கநாயகி.

கடிதத்தை இரண்டு முறை படித்துவிட்டு அதை நான்காய் மடித்து, எட்டுத் துண்டுகளாய் கிழித்துப் போட்டார் தீர்த்தகிரி. ரமேஷ் முகம் மாறினான்.

''என்ன மாமா லெட்டரைக் கிழிச்சுட்டீங்க?''

''இந்த லெட்டரை நீ நிஜமா படிக்கலையா... ரமேஷ்?''

''இல்லை மாமா...''

''உனக்கும் அனிதாவுக்கும் கல்யாணம் பேசணும்னு ரங்கநாயகி லெட்டர் எழுதியிருக்கா...!'' கோபமாய் பேசினார் தீர்த்தகிரி.

ரமேஷ் பேசாமல் தலைகுனிந்து ஜிப்பாவை நீவி விட்டான். பிறகு மெல்லிய குரலில் சொன்னான்.

''அம்மாவுக்கு அந்த ஆசை இருக்கும் போலிருக்கிறது.''

''எனக்கு இல்லையேடா ரமேஷ்!''

''மாமா...''

''ரமேஷ்! உனக்கு தெரியுமோ தெரியாதோ.... ஆறு மாசத்துக்கு முன்னாடி நான் அனிதாவோட கல்யாண விஷயமாய் உங்கம்மாவை பார்த்து பேசிட்டிருந்தப்போ அனிதாவை 'ரமேஷுக்கு கட்டிவைக்கலாம்'ன்னு சொன்னேன். அதுக்கு உங்கம்மா என்ன பதில் சொன்னா தெரியுமா?''

ரமேஷ் தெரியாது என்பது போல் தலையாட்டினான்.

தீர்த்தகிரி தொடர்ந்தார்.

''சொந்தத்தில் கல்யாணம் பேசறது வேண்டாம்

அண்ணா. ரமேஷுக்கு பெரிய இடத்திலிருந்து பொண்ணைத் தர்றேன்னு வந்திருக்காங்க. அனிதாவுக்கு ஏதாவது சுமாரானவரன் வந்தா, உடனடியா முடிச்சுடுங்க. கையில் காசில்லேன்னா என்கிட்ட வாங்க... பன்னண்டு அணா வட்டி போட்டு கடன் தர்றேன். கல்யாணத்தை பண்ணி வைக்க முடியாதுன்னு சொன்னாடா... உன்னோட அம்மா!''

''ஸாரி மாமா! அம்மா அப்படியெல்லாம் பேசினது எனக்குத் தெரியாது. அனிதாவை எனக்குத்தான் கட்டித் தரணும்னு கட்டாயம் இல்லை. என்னைக் காட்டிலும் அனிதாவுக்கு வேற யாராவது பொருத்தமானவனா வந்தா அவனுக்கே கட்டிக்குடுத்துடுங்க....''

தீர்த்தகிரி சிரித்தார்.

''அனிதாவுக்கு ஏத்த வரன் வந்தாச்சு ரமேஷ்! மாப்பிள்ளையோட பேர் பிருதிவ். பெரிய இடம். வரதட்சணையா சல்லிகாசுகூட எதிர்பார்க்கலை. பையனோட அம்மாவும் அப்பாவும் மும்பைல பெரிய கை. நம்ம நாகராஜ மாமாவுக்கு வேண்டியவங்க.''

''எஸிட்? வெரி கிளாட்...''

மனசுக்குள் காயப்பட்டு-முகத்தில் சந்தோஷத்தைக் காட்டினான் ரமேஷ்.

பத்மாவதி காபியோடு வந்தாள்.

''பத்மா! காபியை அப்படி வச்சிட்டு போய் மாப்பிள்ளையோட போட்டோவைக் கொண்டு வந்து ரமேஷுக்கு காட்டு.'' தீர்த்தகிரி சொல்ல, பத்மாவதி உள்ளே போய் போட்டோவைக் கொண்டு வந்தாள். ரமேஷிடம் நீட்டினாள்.

போட்டோவை வாங்கினான் ரமேஷ். பார்த்தான். பார்த்துக்கொண்டேயிருந்தான்.

''என்ன ரமேஷ் போட்டோவை அப்படி பார்க்கறே?''

''மாமா.''

''என்ன?''

''இந்த போட்டோவில் இருக்கற இளைஞனை நான் எங்கேயோ பார்த்திருக்கேன்!''

# 3

''இந்த போட்டோவில் இருக்கிற இளைஞனை நான் எங்கேயோ பாத்திருக்கேன்'' என்று ரமேஷ் சொன்னதுமே தீர்த்தகிரி சிரித்தார்.

''மாப்பிள்ளை திருநெல்வேலியில்லை ரமேஷ் மும்பை.... மும்பைக்கு நீ எப்போ போனே...? எப்போ பார்த்தே...?''

கிண்டலாய் கேட்ட தீர்த்தகிரியை யோசனையாய் ஏறிட்டான் ரமேஷ் ''மாமா... நான் மும்பைக்கு போனது இல்லைதான்... ஒத்துக்கறேன்... ஆனா இந்த பிருதிவ்வை நான் பார்த்திருக்கேன்... எப்போ எங்கே பார்த்தேன்னு மூளைக்குப் பிடிபடலை...''

பின்மண்டையைத் தடவிக் கொண்டான் ரமேஷ்.

பத்மா குறுக்கிட்டாள். பெருமை வழிகிற குரலில் சொன்னாள். ''ரமேஷ்! மாப்பிள்ளை அடிக்கடி வெளிநாடுகளுக்கு போறவராம். 'வெளிநாட்டுப் பயணம்'ன்னு போட்டு இவர் போட்டோ பேப்பர்ல வந்திருக்கலாம். நீ தான் கண்ட பேப்பர்லையெல்லாம் பார்க்கிற ஆசாமியாச்சே.''

ரமேஷ் இன்னமும் யோசனையில் இருந்தான். தீர்த்தகிரி மர பீரோவைத் திறந்து... வேஷ்டியொன்றை எடுத்து இடுப்புக்கு சுற்றிக்கொண்டே அவனை கேலிப் புன்னகையோடு பார்த்தார். ''டேய் ரமேஷ்! உன்னோட கற்பனையெல்லாம் கதை எழுதறதோட நிப்பாட்டிக்க. போட்டோவை பார்த்துட்டு கண்டமேனிக்கு மூளையை குழப்பிக்காதே. காபியை குடிச்சுட்டு மொதல்ல குளி... ரெண்டு பேரும் ஒண்ணா சாப்பிடலாம். பத்மா... பாய்லர்ல கரியைப் போடு. தண்ணி காயட்டும்.''

பத்மா பாய்லரை நோக்கிப்போக - தீர்த்தகிரி பூஜையறையை நோக்கி நடந்தார். ரமேஷ் காபியை ஒரே மூச்சில் குடித்து முடித்துவிட்டு-தோளில் மாட்டியிருந்த ஜோல்னாபையை சுவரிலிருந்த ஆணியில் மாட்டினான். யோசித்துக்கொண்டே பாத்ரூம் போனான்.

'எங்கே பார்த்தோம்?'

யோசித்துக் கொண்டே உடம்புக்கு சோப்பை தேய்த்தான்.

'எங்கே பார்த்தோம்?'

யோசித்துக்கொண்டே மாமா தீர்த்தகிரியோடு இட்லிசாப்பிட்டான். தீர்த்தகிரி அவனுடைய தோளைத் தட்டினார்... "டேய்ரமேஷ்... தட்டைப் பார்த்துசாப்பிடு."

"மாமா..."

"என்னடா...?"

"மாப்பிள்ளை பிருதிவ்வுக்கு என்ன வேலை? ஜாப்ல இருக்காரா?"

தீர்த்தகிரி இட்லி வாயோடு சிரித்தார்.

"மாப்பிள்ளை எதுக்காக ஒருத்தர்கிட்ட போய் வேலைபார்க்கணும் ரமேஷ்...? அவர்க்கும் அவங்க அப்பாவுக்கும் மும்பைல ஏகப்பட்ட பிசினஸ் இருக்கு..."

"ஃபேமிலியைப் பத்திவிசாரிச்சிங்களா மாமா?"

"விசாரிக்க வேண்டிய அவசியமில்லை ரமேஷ். பையனோட அப்பா லட்சுமி நாராயணன் என்னோட ஃப்ரண்ட் நாகராஜனுக்கு ரொம்பவும் பரிச்சயம்... நம்ம அனிதாவுக்கு இவ்வளவு செழிப்பான இடம் வாறதுக்கு காரணம் நாகராஜன்தான்."

ரமேஷ் ஒன்றும் பேசாமல் மௌனமாய் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். பத்மா சட்னியையும், சாம்பாரையும் வார்த்துக் கொண்டே கேட்டாள்.

"என்னரமேஷ்... ஒரு வாரம் இங்கே இருப்பயில்ல?"

"இல்ல... இன்னிக்கு ராத்திரியே நான் கிளம்பணும் அத்தை... அம்மா எனக்காக காத்திட்டிருப்பா... போய் நீங்க சொன்னபதிலை அம்மாவுக்கு சொல்லணும்."

தீர்த்தகிரி கைகழுவிக் கொண்டே கேட்டார் "ரமேஷ்! நான் அப்படி பேசினதுல உனக்கொண்ணும் வருத்தமில்லையே?"

"எனக்கு எந்த வித வருத்தமும் இல்லை மாமா!"

"அனிதாவோட கல்யாணம் முடியட்டும்... இதே ஊர்ல உனக்கு வேற ஏதாவது பொண்ணை பார்த்து முடிச்சுடலாம்."



"ஸாரி மாமா! இனிமே எனக்கு கல்யாணம் அடுத்த ஜென்மத்துலதான். எனக்கிருக்கிற எழுத்து திறமையை வெச்சுக்கிட்டே காலத்தை ஓட்டிடுவேன்."

தீர்த்தகிரியும், பத்மாவும் கனமான பார்வைகளோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

பாஸ்போர்ட் சைஸ் போட்டோவில் கன்னங்குழிய புன்னகைத்த அனிதாவை, ஸ்காட்ச் நிரம்பிய டம்ளரை ஏந்திக் கொண்டே வெறித்துப் பார்த்தார் புருஷோத்தம்.

எதிரே உட்கார்ந்து அவர் முகத்தையே உன்னிப்பாய் பார்த்துக் கொண்டிருந்த லட்சுமி நாராயணன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டார்.

"என்னபுருஷோத்தம்...? எப்படியிருக்கு மால்?"

"ஒரே வார்த்தை. அற்புதம்..."

"அடுத்த வாரம் இந்நேரம் அந்த மால் இந்த சோபாவில் உட்காந்திருக்கும். ரேட் பேசறதாயிருந்தா இப்பவே பேசிடு... உனக்காக ரிசர்வ் பண்ணிடறேன்..."

புருஷோத்தம் தன்னுடைய தொண்ணூறு கிலோ உடம்பை லேசாய் அசைத்துக் கொண்டே, தன்னுடைய சிவப்பேறிப்போன கண்களினால் லட்சுமி நாராயணனைப் பார்த்தார்.

"என்ன ரேட் வெச்சிருக்கே...?"

"நான் இன்னும் ஃபிக்ஸ் பண்ணலை... போட்டோவில் நீ பார்க்கிற அனிதா சொற்பம் புருஷோத்தம்... நேர்ல பார்த்தா ஒரு நிமிடம் ஸ்தம்பிச்சுப் போயிடுவே! தூத்பேடாவில் பண்ணின மாதிரி உடம்பு... நீ செகண்ட் ஸேலுக்கு அவளைத் தள்ளினாலும் நல்ல விலைக்குப் போவா..."

"போட்டோவை பார்த்தாலே தெரியுது... தமிழ்நாட்டு பொண்ணுகளுக்கே இந்த கண்ணுதான் ப்யூட்டி. பார்வையே "லேப்டி பின்"ல குத்தற மாதிரி இருக்கு..."

"நீ இன்னும் ரேட்டைச் சொல்லலை... புருஷோத்தம்."

புருஷோத்தம் டம்ளரிலிருந்த ஸ்காட்சை முடித்து விட்டு புறங்கையால் வாயைத் துடைத்தபடி சொன்னார்.

"ட்வெண்டி தௌஸண்ட்..."

''பெக்கர்ஸ் டிப். புருஷோத்தம்! போன மாசம் ஸேல் பண்ணின சோனியாவுக்கு ஒரு பெமினைன் ஸ்ட்ரக்சர் கிடையாது. அவளை இருபத்தஞ்சாயிரத்துக்கு ராம்லால் கஹானியாவுக்கு தள்ளினேன். இந்த அனிதா ஒரு ரோஜாமொக்கு மாதிரி... நான் போனாலும் மணிப்பால் வி.ஐ.பி.களுக்குத் தள்ளி ஒரு ராத்திரி ஐயாயிரம், பத்தாயிரம் பாக்கலாம்.'' லட்சுமிநாராயணன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அடுத்த அறையிலிருந்து வெளிப்பட்ட கமலமும், பிருதிவ்வும் புருஷோத்தம் அருகே வந்தார்கள்.

பிருதிவ் உரிமையோடு அவர் அருகே உட்கார்ந்தான்.

''புருஷோத்தம்! இப்போ உங்ககிட்ட இருக்கிற மீனா, வைசாலி, ஆஷா, நிஷாணா, ரேகா, இவங்களை காட்டிலும் அபாரமானவ அனிதா. இந்த வார்த்தையை நான் வியாபாரத்துக்காக பேசலை. அனிதாவுக்கு வெல்வெட் உடம்பு. அவளை யாராயிருந்தாலும் சரி ஆறே மாசம்... ஹில் பிகம் ஏ லேக்கியர்...''

''ஓ.கே. அம்பதாயிரம்...''

''அனிதாவை பார்த்தா அப்படி சொல்லமாட்டிங்க...''

''அனிதா இங்கே வரட்டும். பார்த்துட்டு ரேட்டைச் சொல்றேன்...'' புருஷோத்தம் சொல்ல, லட்சுமி நாராயணன் உதட்டைப் பிதுக்கினார். பிருதிவ்வை ஏறிட்டார்.

''பிருதிவ்...!''

''பாஸ்...''

''அனிதாவை வெச்சு சம்பாதிக்கிற கொடுப்பினை புருஷோத்தமுக்கு இல்லை... அவரை கம்பல் பண்ணாதே. பண்டாரியை காண்டாக்ட் பண்ணி நாளைக்கு காலையில பத்து மணிக்கு வரச்சொல்லு.''

''எஸ்பாஸ்...''

பிருதிவ் எழுந்தான் வேகமாக.

''டேரா...பய்யா'' புருஷோத்தம் பிருதிவ்வின் கையைப் பற்றி இழுத்து உட்கார வைத்தார்... லட்சுமி நாராயணன் பக்கம் திரும்பினார்.

''சரி...அறுபது.''

''ஊஹூம்...''



''எழுபது...''

''போறாது... மேலே போ...''

''ஸாரி. இது தான் என்னோட லிமிட்... எழுபதுக்கு முடிச்சுக்குவோம். அமௌண்டல டென் பர்சென்ட் அட்வான்ஸாத் தந்துடறேன்.''

புருஷோத்தம் மறுபடியும் ப்ரீப் கேஸைத் திறந்தார். லட்சுமிநாராயணன் உச்கொட்டினார். ''பிருதிவ்...''

''பாஸ்.''

''பண்டாரிக்கு போன் பண்ணு... பண்டாரி ரசனை உள்ள மனுஷன். அனிதாவோட போட்டோவை பார்த்ததும் லட்சரூபாய்க்கு ஃபிக்ஸ் பண்ணிடுவார்.''

பிருதிவ் பண்டாரிக்கு போன் செய்ய எழுந்தான்.

''டேரா பய்யா. அனிதாவுக்கு விலை லட்சம்னு சொல்றே. ஐ... அக்ரீட்... அட்வான்ஸ் பத்தாயிரம் வாங்கிக்க...''

கரன்சி நோட்டுக்கற்றை எடுத்து மேஜையின் மேல் பரப்பினார் புருஷோத்தம். கமலம் எண்ணிப் பார்த்து அள்ளிக்கொண்டு போனாள்.

''பிருதிவ்... புருஷோத்தம்க்கு புது பாட்டிலை உடை...''

''எஸ்பாஸ்.''

புருஷோத்தம் லட்சுமி நாராயணன் காதருகே குனிந்தார். ''லட்சுமிநாராயணன்... ஒரு சந்தேகம்.''

''என்ன?''

''இந்த அனிதா பொண்ணை எப்படி கொண்டு வரப்போறீங்க...?''

''அதெல்லாம் உனக்கு தேவையில்லாத விஷயம். புருஷோத்தம். அடுத்த வாரம் இந்நேரம் நீ இங்கே வா.. அனிதா இருப்பா. நீ உன் கார்ல கொண்டு போயிடலாம். எல்லா பெண்களையும் போல அவளும் ஆரம்பத்துல கொஞ்சம் முரட்டுத்தனம் பண்ணுவா. அப்புறம் போகப் போக சரியாயிடுவா''.

''போலீஸ் தொந்தரவு வராதே...''

''வராது... வந்தா நான் டீல் பண்ணிக்கிறேன்.''

''லாஸ்ட் டைமும் இதே மாதிரிதான் நீ சொன்னே லட்சுமிநாராயணன். அந்த ஆந்திரா கேர்ள் விசாலினியை மோப்பம் பிடிச்சுட்ட ஹைதராபாத் போலீஸ் என் பங்களா

வாசற்படி வரைக்கும் வந்துட்டாங்க. அவங்களை கன்வின்ஸ் பண்ணி அனுப்புறதுக்குள்ளே படாத பாடுபட்டுட்டேன். சவுத் இந்தியன் லேடீஸ்ன்னாலே பயமா இருக்கு...''

லட்சுமி நாராயணன் சிரித்தார்.

''புருஷோத்தம்! அந்த அனிதாவை இங்கே கொண்டு வர்றதுலே ஒரு சிக்கலும் இல்லை. திட்டம் என்கிட்ட துல்லியமா இருக்கு...''

''தமிழ் நாட்டில் அனிதாவுக்கு எந்த ஊர்?''

''புருஷோத்தம்...! உனக்கு ரேட் பேசற உரிமை மட்டுந்தான் இருக்கு. மற்ற விஷயங்களை என்கிட்ட இருந்து கிளறாதே... ஸ்காட்ச் சாப்பிடு... சிக்கன் ப்ரிப்பேர் பண்ணச் சொல்லட்டுமா...? சில்லி சிக்கன்...''

''ம்'' என்றார் புருஷோத்தம்.

பிருதிவ் ஃப்ரிட்ஜிலிருந்து ஸ்காட்ச்சை எடுத்து மூடியை நெம்பி டம்ளர்களில் மெஷரா வைத்து தந்தான். சோடாவை கலந்து கொண்ட புருஷோத்தம் டீப்பாயின் மேல் கவிழ்த்து வைத்திருந்த அனிதாவின் பாஸ்போர்ட் ஸைஸ் போட்டோவை எடுத்து சற்று எட்டத்தில் வைத்து பார்த்தார்.

அனிதா புன்னகைத்து மனசை ரணமாக்கினாள்.

அவனைத் தொடப்போகிற அடுத்த வாரத்துக்காக அந்த நிமிடத்திலிருந்தே காத்திருக்க ஆரம்பித்தாள். பிருதிவ் ஊற்றிய ஸ்காட்ச் டம்ளரை வாங்கி - அனிதாவின் ஃபோட்டோவை பார்த்துக்கொண்டே தீவிரமாய் உறிஞ்சினார்.

# 4

அடுத்த வாரம்.

புதன்கிழமை.

விடியற்காலை நேரம்.

ராமகிருஷ்ண கல்யாண மண்டபத்தில் கூட்டம் நிரம்பியிருக்க - குழந்தைகளின் இரைச்சலிலும், கெட்டிமேள சத்தத்திலும் - அட்சதை அரிசி சிதறச் சிதற - பிருதிவ் அனிதாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.



அவனுடைய தோள்பட்டை அனிதாவின் மெலிசான தோள்பட்டையோடு உரிமையாய் இடித்துக் கொண்டிருக்க - அந்த நெருடலை தவிர்க்க முடியாமல் இதயம் நடுங்கியது.

யார் யாரோ வர்ணாசிப்பன் சுற்றிய அட்டைகளை நீட்டி 'கங்கிராட்ஸ்' சொல்லிக் கொண்டிருக்க, இயந்திரத் தனமாய் முறுவலித்தாள். அத்தனை கூட்டத்துக்கு மத்தியிலும் பிருதிவ்வின் முழங்கை அனிதாவின் வெல்வெட் இடுப்பில் சில்மிஷம் செய்ய - அவள் அருவையோடு உடம்பை நெளித்தாள்.

மணவறைக்கு பக்கத்தில் நின்றிருந்த லட்சுமி நாராயணனும் கமலமும் பார்வையிலேயே சந்தோஷங்களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

''பொண்ணு அன்னிக்கு பார்த்ததைவிட இன்னிக்கு ரொம்பவும் அழகா இருக்கிற மாதிரி என் மனசுக்குப் படுதுங்க...''

''அதுதான் கல்யாணக் களை...''

கல்யாணத்துக்கு வந்திருந்த கும்பல் டைனிங் ஹாலை நோக்கிக் கலைந்து கொண்டிருக்க, தீர்த்தகிரியும் பத்மாவும் முறையே பட்டு வேஷ்டியோடும், பட்டுப் புடவையோடும் பரவசமாய் வந்தார்கள்.

லட்சுமி நாராயணன் போலியான பவ்யத்தோடு கை குவித்தார். ''எல்லாம் நல்லபடியா திருப்தியா முடிஞ்சிருக்கு சம்பந்தி... எங்க சபைலேருந்து யாராவது - ஏதாவது தப்பு பண்ணியிருந்தா நான் மன்னிப்பு கேட்கிறேன்...''

கரைந்து போனார் தீர்த்தகிரி. கண்களில் நீர் பனித்தார்.

''உங்க உறவு ஜனம் மேல எந்த அப்பழுக்கையும் சொல்ல முடியாதுங்க... போன ஜென்மத்து பூர்வபுண்ணியம்... எம் மகளுக்கு இப்பேர்ப்பட்ட வாழ்க்கை கிடைச்சிருக்கு...''

பத்மா பட்டுப்புடவை தலைப்பை இன்னமும் நன்றாய் போர்த்திக் கொண்டு கணவரின் காதோடு என்னவோ சொன்னாள்.

லட்சுமி நாராயணன் சிரித்தார்.

''சம்பந்தியம்மா என்ன சொல்றாங்க...?''

தீர்த்தகிரியும் புன்னகைத்தார்.

''சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே...''

''தைரியமா சொல்லுங்க...''

''பொண்ணைக் கூட்டிட்டு இன்னிக்கேவா மும்பை புறப்பட்டுப் போறீங்க...?''

''ஆமா... அதுதான் ஏற்கனவே பேசி முடிவு பண்ணின விஷயமாச்சே...''

''அதுல ஒரு சின்ன திருத்தம்...''

''என்ன?''

தீர்த்தகிரி தயங்கி விட்டு தொடர்ந்தார்.

''பொண்ணும் மாப்பிள்ளையும் ஒரு வாரம் இங்கேயே இருந்து விருந்து உபசாரங்களை முடிச்சுட்டு மும்பை புறப்பட்டுமே! அனிதாவோட அம்மா ஆசைப்படறா...''

கமலமும் லட்சுமி நாராயணனும் முகம் மாறினார்கள்.

''அனிதாவும் பிருதிவ்வும் ஒரு வாரம் இங்கேயே இருக்கிறதா...? நோ... நோ... இன்னிக்கு சாயந்திரம் அவங்க மும்பை புறப்பட்டாகணும்... ஃப்ளைட்ல டிக்கெட் ரிசர்வ் பண்ணியாச்சு... நாளைக்கு சாயங்காலம் ஒபராய் ஷெரட்டன்ல மேரேஜ் ரிசப்ஷன் அரேஞ்ச் பண்ணியிருக்கு...''

தீர்த்தகிரி கையை குவித்தார்.

''மன்னிக்கணும்... அனிதாவோட அம்மா ரொம்பவும் ஆசைப்படறா... பொண்ணும் மாப்பிள்ளையும் ஒரு நாள் கூட தங்காம... புறப்பட்டு போறாங்களேன்னு ஆதங்கப்படறா...''

''இதோ பாருங்க சம்பந்தி... அனிதாவும் பிருதிவ்வும் இன்னிக்கு மும்பை புறப்பட்டு வரட்டும். நாலைஞ்சு நாள் அங்கே இருந்துட்டு மறுபடியும் இங்கே வரட்டும். வாரம் பத்து நாள் மாப்பிள்ளையையும் பொண்ணையும் வெச்சு சீராடி விருந்து போடுங்க... உங்களுக்கு சலிச்சபின்னாடி அவங்களை அனுப்பிவையுங்க... போதுமா...?''

தீர்த்தகிரி பத்மாவின் பக்கம் திரும்பினார்.

''என்ன பத்மா சொல்றே...?''

பத்மா சிரிப்போடு தலையாட்டினாள்.

மணவறையில் உட்கார்ந்திருந்த அனிதாவும் பிருதிவ்வும் ரோஜா இதழ்கள் உதிர எழுந்தார்கள். ஐயர் சொன்ன திசைப் பக்கமாய் பார்த்து சூரிய நமஸ்காரம் செய்தார்கள்.



''மாப்பிள்ளையையும் பொண்ணையும் கூப்பிட்டு போய்ப்பால்பழம் குடுங்க...'' ஐயர் சொல்ல கமலமும், பத்மாவும் நகர்ந்தார்கள்.

அனிதாவின் முகத்தை நிமிர்த்தினாள் கமலம்.

''என்னம்மா அனிதா... மூஞ்சி இப்படி வேர்த்துப் போயிருக்கு... டேய்... பிருதிவ்! அனிதாவுக்கு உன்னோட கர்ச்சீஃபை குடேன்டா...''

''வேணுமின்னா நானே தொடைச்சி விட்டுடுமாம்மா...?'' தன் கோட் பாக்கெட்டிலிருந்து சென்ட் வாசம் அடிக்கும் அந்த கர்ச்சீஃபை எடுத்து - அனிதாவின் முகம் துடைக்கப் போக அனிதா வெறுப்போடு நகர்ந்தாள்.

எல்லோரும் சிரித்தார்கள்.

உயரமான மேடையிலிருந்து - வீடியோ கேமரா ஒன்று நாலா திசைகளிலும் சுழன்று கொண்டிருந்தது. கேமராவைக் கையாண்டு கொண்டிருந்த அந்த இளைஞன் கத்தினான்.

''மாப்பிள்ளை சார்! பொண்ணு கூட சேர்ந்த மாதிரி நில்லுங்க...''

பிருதிவ் அனிதாவோடு நெருக்கமாய் நிற்க - அனிதாவுக்கு பிருதிவ்வின் உடம்பிலிருந்து அடித்த வியர்வை நாற்றம் வயிற்றைக் குமட்டியது.

'கடவுளே! ஒரு ஆண் மகனின் அண்மையே எனக்கு இவ்வளவு வெறுப்பைத் தருகிறபோது - அந்த அந்தரங்க உறவின் ஆர்ப்பாட்டங்களை எப்படி பொறுத்துக் கொள்ளப் போகிறேன்...? இந்த ஆண் மகனின் தொடல்களை எப்படி அனுமதிக்கப் போகிறேன்...?'

அனிதாவின் நெஞ்சை பயம் அடைத்தது.

ஹோட்டல் குரு பிரசாத்.

அறையின் கதவை சாத்திவிட்டு கட்டிலை நெருங்கினார் லட்சுமிநாராயணன். சூட்கேஸில் டிரஸ்களை வைத்து அடுக்கிக் கொண்டிருந்த கமலம் நிமிர்ந்தாள்.

''இனிமேதாங்க நாம ஜாக்கிரதையா இருக்கணும்... யாருக்கும் சந்தேகம் வராதபடி கல்யாணத்தை முடிச்சுட்டோம். அனிதாவை மும்பைல வெச்சு

ஹேண்டில் பண்றதுதான் ரொம்ப கஷ்டம்... அடம் பிடிக்கிற டைப் மாதிரி தெரியுது..."

"அதெல்லாம் சமாளிச்சுடலாம்... நீ சீக்கிரம் கிளம்பு... ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியே நாம ஏர்போர்ட் போகணும்... பிருதிவ்வும் அனிதாவும் கல்யாண மண்டபத்திலிருந்து நேரா ஏர்போர்ட் வந்துடுவாங்க... ஃப்ளைட் சரியா அஞ்சு மணிக்கு..."

"இதோ நான் புறப்படறேன்..." கமலம் சூட்கேஸை மூடினாள். சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்ட லட்சுமி நாராயணன் மெல்லிய குரலில் கூப்பிட்டார்.

"கமலம்..."

"ம்..."

"ஒரு விஷயம் கேள்விப்பட்டியா?"

"என்னங்க...?"

"அனிதாவுக்கு ஒரு முறைப் பையன் இருக்கானாம்... பேரு ரமேஷ். ஊரு திருநெல்வேலி. தீர்த்தகிரியோட தங்கச்சி மகன். போன வாரம் தம் பையனுக்கு அனிதாவை கேட்டு தங்கச்சிக்காரி கடிதம் குடுத்து அனுப்பி விட்டாளாம்... தீர்த்தகிரி பிடிவாதமா பொண்ணைத் தரமாட்டேன்னு சொல்லிட்டாராம்."

"உங்களுக்கு எப்படி இந்த விஷயம் தெரியும்?"

"தீர்த்தகிரியே சொன்னார்..."

"அந்த ரமேஷ் கல்யாணத்துக்கு வரலையா...?"

"வரலையாம்..."

கமலம் ஏதோ சொல்வதற்காக வாயைத் திறந்த அதே நேரம்-

டெலிபோன் சிணுங்கியது.

லட்சுமி நாராயணன் ரிஸீவரை எடுத்தார்.

"எஸ்..." என்றார்.

மறுமுனையில் பிருதிவ்வின் குரல் கேட்டது.

"பாஸ்.. நான் பிருதிவ் பேசறேன்...!"

"எங்கிருந்து பேசறே...?"

"ஏர்போர்ட் பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்து..."

"எல்லோரும் ஏர்போர்ட் வந்தாச்சா...?"

"வந்தாச்சு..."

"நானும் கமலமும் இப்ப வந்திடறோம்..."



"பாஸ்..."

"என்ன?"

"அனிதா அழுதுட்டே இருக்கா..."

"கல்யாணமாகி புருஷன் வீடு போற எல்லா பொண்ணுங்களுமே அப்படிதான் அழுவாங்க..."

"ஆனா இந்த அழுகை கொஞ்சம் அதிகப்படியான அழுகை. நான் கையைப் பிடிச்சாலே அவ உடம்பு நடுங்குது..."

"போகப் போக எல்லாமே சரியாயிடும்..."

"நான் ரிஸீவரை வெச்சுடறேன் பாஸ்! யாரோ போன் பேசறதுக்காக வெளியில் வெயிட் பண்றாங்க... நீங்க உடனே புறப்பட்டு வாங்க..." மறுமுனையில் ரிஸீவரை வைத்துவிட்டான் பிருதிவ்.

லட்சுமி நாராயணன் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் இட்டு நசுக்கிவிட்டு திரும்பினார். கமலம் சூட்கேஸை லாக் செய்து முடித்திருந்தாள். "போன்ல யாரு...?"

"பிருதிவ்..."

"எங்கிருந்து பேசினான்...?"

"ஏர்போர்ட்..."

"அநாவசியமா எதுக்கு போன் பண்ணி பேசினான்...? விஷயம் வெளியே கொஞ்சம் கசிஞ்சதாலும் விவகாரம் பெரிசாயிடும்..."

"நீ அளவுக்கு அதிகமா பயப்படறே கமலம்..."

"பயப்படற விஷயங்களுக்கு பயப்பட்டுத்தாங்க ஆகணும்."

"சரி... புறப்படு."

புறப்பட்டார்கள்.

கோவை ஏர்போர்ட்

போயிங் பறக்கக் காத்திருக்க- லௌஞ்சில் எல்லோரும் நின்றிருந்தார்கள்.

இறுகிய முகத்தோடு தீர்த்தகிரி-

அழுது வீங்கிய முகத்தோடு பத்மா-

இன்னமும் அழுதபடி அனிதா-

சந்தோஷ முகங்களோடு லட்சுமி நாராயணன், கமலம், பிருதிவ். லட்சுமி நாராயணன் அனிதாவை பார்த்து 'உச்'

கொட்டினார்.

''என்னம்மா... அனிதா... உன்னோட அழுகையை நிப்பாட்டவே மாட்டியாம்மா...? மும்பை போனதும் ரெண்டு நாள்ல திரும்பி வரலாம்...''

அனிதா அவரை பொருட்படுத்தாமல் வாயில் கர்ச்சீஃபை பொத்தி கண்களில் நீர் கரகரவென்று வழிய மௌனமாய் விசும்பினாள். கமலம் அனிதாவை நெருங்கினாள்.

''சொன்னா கேக்கணும் அனிதா... நீயே இப்படி அழுதா உன்னைப் பெத்தவங்களுக்கு மனசு எப்படியிருக்கும்...?''

லௌஞ்சில் இருந்த ஸ்பீக்கரில் ஒரு பெண் குரல் 'கான்வென்ட்' இங்கிலீஷில் - மும்பைக்கு பயணம் செய்யப்போகிறவர்களை விமானத்திற்கு துரத்தியது.

''அப்பா... அம்மாகிட்ட சொல்லிக்கோம்மா... நாம லௌஞ்சுக்கு போகணும்...''

''அ...அம்மா...''

''ச்சீ... அசடு...'' கண்ணை துடைத்தாள்... ''போறப்ப என்ன அழுகை...?'' என்று சொல்லும்போதே பத்மா உடைந்து போய் அழுதாள்.

தீர்த்தகிரி துக்கத்தை அடக்கிக்கொண்டு புன்னகைத்தார்.

''அனிதா... நீ புறப்படம்மா...! மாப்பிள்ளை! நீங்க அனிதாவை கூட்டிக்கிட்டு போஙக...' அவ இங்க நின்னுட்டிருந்தா இப்படித்தான் அழுவா...''

பிருதிவ் அதற்காகவே காத்திருந்தவன் போல் அனிதாவை நெருங்கி அவள் தோள் மேல் கையை வைத்தான்.

''வா...அனிதா...''

அனிதா கண்களில் நீரோடு தீர்த்தகிரியையும், பத்மாவையும் பார்த்து கைகளைக் கூப்பி நமஸ்கரித்தாள்.

''அம்மா...! அ... அப்பா! போயிட்டு வர்றேன்...'' பிருதிவ்வோடு நகர்ந்தாள்.

''சம்பந்தி...! நாங்களும் வர்றோம்...''

லட்சுமிநாராயணனும் கமலமும் புன்னகை முகங்களோடு தொடர்ந்தார்கள். எல்லோரும் கும்பலாய் போயிங்கை நோக்கி நடக்க - அனிதா மட்டும் மை கரைந்த



கண்களில் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே நடந்தாள்.

பத்மா கணவரை ஏறிட்டாள்.

''வயித்தை எல்லாம் என்னமோ பண்ணுதுங்க...''

''ரெண்டு நாள்லே அனிதா மறுபடியும் வரப்போறா பத்மா! ஏன் அழறே?''

''குழந்தை ஒரே நாள்ல இளைச்சுப்போன மாதிரி தெரியறாங்க!''

''அதுதான் ஒரு தாயோட பார்வை...''

''ரெண்டு நாள்ல அனிதாவும் மாப்பிள்ளையும் நிச்சயம் வருவாங்களா...? மாப்பிள்ளையோட அப்பாகிட்டே சொன்னீங்களா...?''

''சொன்னேன் பத்மா...''

இருவரும் கண்ணீரோடு நின்றிருக்க - சரியாக ஐந்து மணிக்கு - போயிங் ரன்வேயை தேய்த்துக் கொண்டு வானத்தில் எம்பியது.

கண்களில் பீறிடுகிற நீரோடு அந்த அலுமினியப் பறவையைப் பார்த்தாள் பத்மா.

தீர்த்தகிரி சிரமப்பட்டு கண்ணீரை அடக்கினார்.

இரண்டு நாள் கழித்து சாயந்தர நேரத்தில் - அந்த தந்தி தீர்த்தகிரியை தேடி வந்தது.

தந்தியை உடைத்த தீர்த்தகிரி அதிர்ந்தார். நம்ப முடியாமல் மறுபடியும் தந்தி வாசகங்களைப் பார்த்தார்.

''அனிதா இறந்து விட்டாள். உடனே வரவும்'' லட்சுமி நாராயணன்.

## 5

தீர்த்தகிரி முற்றத்துத் தூணைப் பிடித்துக்கொண்டு அப்படியே தளர்ந்தார். கையிலிருந்த காகிதம் காற்றில் அடித்துக்கொண்டு ஓட, பத்மா அதை எடுத்தபடி தவிப்பாய் ஓடி வந்தாள்.

''என்னங்க... என்னங்க...''

''ப...ப...பத்மா...''

''என்னங்க... என்ன விஷயம்...? தந்தி யார் குடுத்திருக்காங்க...?'' கேட்டுக்கொண்டே தந்தியின் வாசகங்களைப் பார்த்தவள், தன் அரைகுறை ஆங்கில

அறிவால் வாக்கியத்தின் விபரீதத்தைப் புரிந்து கொண்டு அதிர்ந்து போனாள். இருதயத்தை சீறுகிற மாதிரி வீறிட்டாள்.

"எ... என்னங்க... தந்தி இப்படி குடுத்திருக்காங்க..."

பத்மாவின் பாமரத்தனமான அலறல் கேட்டு, அக்கம் பக்கத்திலிருந்த வீடுகள் விழித்துக் கொள்ள ஆண்களும் பெண்களுமாய்ச் சூழ்ந்தார்கள்.

"என்னசார்... என்னாச்சு...?" எதிர் வீட்டில் குடியிருந்த ரிட்டையர்ட் போஸ்ட் மாஸ்டர் முத்தையா - பத்மாவின் கையிலிருந்த தந்தியை வாங்கினார்.

பார்த்தார்.

"அடப்பாவமே!" என்று சொல்லிவிட்டு சூழ்ந்து நின்றிருந்த அண்டை வீட்டுக்காரர்களிடம் விஷயத்தை ஒலிபரப்பினார்.

கும்பல் ஸ்தம்பித்தது.

"தந்தி இந்த விலாசத்துக்கு வந்ததுதானா...? நல்லாப்பாருங்க..."

"நேத்து கல்யாணமாகி புருஷன் வீடு போன... பொண்ணு இன்னிக்கு எப்படி சாவா...?"

"விலாசம் மாறி வந்த தந்தியாத்தான் இருக்கும்..."

கும்பல் விதவிதமான தொனிகளில் சம்பாஷிக்க, ரிட்டையர்ட் போஸ்ட் மாஸ்டர் முத்தையா தந்தியைப் புரட்டிப்பார்த்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னார்.

"தந்தி சரியான விலாசத்துக்குத்தான் வந்திருக்கு... மத்தியானம் ஒரு மணிக்கு தந்தி குடுத்திருக்காங்க... அனிதாவுக்கு என்னமோ ஆயிருக்கு...? தீர்த்தகிரி ஸார்... அப்படியே உட்கார்ந்திட்டிருந்தா எப்படி...? போய் என்னான்னு பார்த்துட்டு வாங்க..."

பத்மா தலையில் அறைந்து கொண்டு மூர்க்கமாய் அழ ஆரம்பித்திருந்தாள். நடுநடுவே வெறிபிடித்த மாதிரி கிறீச்சிட்டாள்.

"என்னோட தங்கத்துக்கு என்னமோ... ஆயிடுச்சு... என்னமோ ஆயிடுச்சு...! என்னங்க நம்ம பொண்ணை அனுப்பவேண்டாம்ன்னு சொன்னேனே கேட்டீங்களா...?"

தீர்த்தகிரி தூணைப் பற்றிக்கொண்டு குப்பை காகிதம்



மாதிரி எழுந்தார். கண்களில் நீர் நிற்காமல் வழிய - தொண்டைக் குழி சிரமமாய்த் துடித்தது.

"அ...அம்மா...அ...அனிதா..."

போஸ்ட் மாஸ்டர் முத்தையா தீர்த்தகிரியை கைத்தாங்கலாய்ப் பற்றிக் கொண்டார். "தீர்த்தகிரி ஸார்! இப்படியே அழுது புலம்பிட்டு உட்கார்ந்திருந்தா... ஒரு பிரயோஜனமும் இல்லை... புறப்பட்டு வர்றோம்ன்னு ஒரு ரிப்ளை டெலிகிராம் குடுத்துட்டு... ஃப்ளைட்டைப் பிடிக்க ஏற்பாடு பண்ணுங்க..."

கும்பலில் கசகசப்பு பரவியது.

"அப்செட்டாகியிருக்கிற அவராலே ஒரு ஏற்பாட்டையும் பண்ணமுடியாது போஸ்ட் மாஸ்டர் ஸார்... அடுத்த ஃப்ளைட் மும்பைக்கு எப்போன்னு விசாரிச்சு நீங்கதான் அவங்களை ஏத்தி விடணும்..."

போஸ்ட் மாஸ்டர் முத்தையா தெருக்கோடியிலிருந்த டெலிபோன் பூத்தை நோக்கி வேகமாய்ப் போனார்.

பத்மாவின் அழுகை உச்சஸ்தாயியிக்கு போய்க் கொண்டிருந்தது.

விமானம் சாந்தாக்ரூஸ் ஏர்போர்ட்டின் ரன்வேயை முத்தமிட்டபோது - மும்பையின் கிழக்குத் திசை கம்யூனிஸ்ட் கட்சிக் கொடியின் நிறத்தில் இருந்தது.

தீர்த்தகிரியும், பத்மாவும் ராத்திரி பூராவும் தூங்காமல் அழுது கொண்டே பயணம் செய்ததில் நிரம்பவும் களைத்துப் போயிருந்தார்கள். வயிற்றுக்குள் பயப்பந்துகள் உருண்டு கொண்டேயிருக்க, இருதயம் தீவிரமான துடிப்பில் இருந்தது.

ஸ்டெப்ஸில் இறங்கி -

தளர்வாய் காரிடரில் நடந்து -

லௌஞ்சுக்கு வந்தார்கள்.

லட்சுமி நாராயணன் கலைந்த தலையோடு மூக்குக் கண்ணாடி இல்லாமல் காத்திருந்தார். அவர்களைப் பார்த்ததுமே வேக வேகமாய் வந்தார்.

தொண்டையினின்றும் குரல் இடறிக் கொண்டே வந்தது.

"சம்பந்தி..."

"அ... அ... அனிதாவுக்கு என்னாச்சு...? என்னோட

கண்மணிக்கு என்னங்க ஆச்சு...?''

''அழாமே... வாங்க... சொல்றேன்...''

பத்மா புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டே, கண்களில் நீரோடு கணவரையும், லட்சுமி நாராயணனையும் தொடர்ந்தாள்.

மூன்று நிமிஷ மௌனமான நடை,

ஏர்போர்ட்டுக்கு வெளியே - ஏராளமான கார்களுக்கு மத்தியில் நின்றிருந்த தன்னுடைய காரை பொறுக்கிக் கொண்டு வந்தார் லட்சுமி நாராயணன்.

''ஏறுங்க...''

பின்பக்கக் கதவைத் திறந்து விட்டார்.

தீர்த்தகிரியும், பத்மாவும் செலுத்தப்பட்ட பொம்மைகள் மாதிரி உள்ளே போனார்கள். கார் நிதானமான வேகத்தில் ஓட ஆரம்பித்தது.

போக்குவரத்து அல்லாத ஏர்போர்ட் ரோடு - ஒரு கறுப்பு நேர்கோடு மாதிரி தெரிய, லட்சுமி நாராயணன் காரை சீராய் கையாண்டு கொண்டே பின்பக்கம் திரும்பிப் பார்த்தார்.

தழுதழுத்த குரலில் சொன்னார்.

''எல்லாமே நிமிஷ நேரத்துல நடந்துடுச்சு சம்பந்தி...''

பத்மா அழுகைக் குரலில் வெடித்தாள்.

''சீக்கிரமா சொல்லுங்கய்யா... என் பொண்ணுக்கு என்னாச்சு...?''

லட்சுமி நாராயணன் தொடர்ந்தார்.

''நேத்தைக்கு காலையில் பத்துமணி சுமாருக்கு பாத்ரூம்ல குளிக்கப் போயிருக்கா அனிதா... பாத்ரூம் எலக்ட்ரிக் ஹீட்டர் கொஞ்ச நாளாவே சரியில்லை. அனிதா விஷயம் தெரியாமே அதனோட ஸ்விட்சைப் போட ஹீட்டர் பிளாஸ்ட் ஆகி... அந்த நெருப்புல சிக்கி...''

''அனிதா... ஆ...''

பத்மா முகத்தை மூடிக்கொண்டு பெரிதாய் வீறிட்டாள். உடம்பு தன்னிச்சையாய் குலுங்கிக் கொண்டிருந்தது. தீர்த்தகிரி மௌனமாய் மனசுக்குள் சிதறிக் கொண்டிருந்தார்.

''அனிதாவோட சத்தத்தைக் கேட்டு - பாத்ரூம் கதவை போத்தெடுத்து உள்ளே போனோம்... அனிதா கருகிப் போய்கிடந்தா... கல்யாணம் முடிஞ்ச ஒருநாள் தான்



எம்பையனோட வாழ்க்கை நடத்தியிருக்கா அனிதா... அதுக்குள்ளே அந்த தெய்வத்துக்கு பொறுக்கலை...''

லட்சுமிநாராயணன் சொல்லிவிட்டு பேச்சை நிறுத்தினார்.

கார் ஜுஹு பீச் ரோட்டில் - கடல் காற்றை சீவியபடி ஓடிக்கொண்டிருந்தது. காரின் பின் சீட்டிலிருந்து அழுகையும் கேவலும் மாறிமாறி எழுந்து கொண்டிருந்தது.

''என்னோட ஒய்ஃப் கமலத்தினால் இந்த அதிர்ச்சியை தாங்கிக்க முடியலை சம்பந்தி. பிரமை பிடிச்ச மாதிரி உட்கார்ந்திட்டிருக்கா... பையன் பிருதிவ் நாலஞ்சுதரம் மயக்கம் போட்டு விழுந்துட்டான்... அனிதா இப்படி எல்லாரையும் துடிக்க வெச்சுட்டு சாவான்னு கொஞ்சம் கூட நினைச்சே பார்க்கலை...''

பத்மா காரின் முன் சீட்டில் முட்டிக் கொண்டாள்.

''பாவிப் பொண்ணே! பாவிப் பொண்ணே...! இப்படி சாகவா கல்யாணம் பண்ணி உன்னை அனுப்பி வெச்சேன்...? என் வயித்துல நெருப்பை அள்ளி போட்டுட்டியேடி...''

கார் மும்பாயின் போக்குவரத்து நெரிசலில் நீந்து - சயான் ரோட்டில் நுழைந்து வேகம் பிடித்து மாதுங்காவில் இருந்த அந்த ஒதுக்குப்புறமான பங்களா வாசலுக்கு வந்த போது... நேரம் ஏழு மணி.

பங்களாவின் வாசலிலும், அதன் சுற்றுப்புறத்திலும் பத்து பதினைந்து கார்கள் நின்று கொண்டிருந்தன. போர்டிகோவிலும், அதன் முன்புற தோட்டத்திலும் வாடகை நாற்காலிகள் வரிசையாய் போடப்பட்டிருக்க - சொற்பமாய் சிலபேர் இறுகிப்போன முகங்களோடு உட்கார்ந்திருந்தார்கள். பங்களா பூராவும் ஒரு சாவின் நிசப்தம்.

லட்சுமி நாராயணன் காரை வாசலுக்கு வெளியில் நிறுத்தி - கீழே இறங்கி - காரின் பின்பக்கக் கதவைத் திறந்துவிட்டார்.

''மனசை தைரியப்படுத்திட்டு வாங்க...''

தீர்த்தகிரியும் பத்மாவும் இறங்கினார்கள். பத்மா நிற்கவே தள்ளாடினாள். தீர்த்தகிரிக்கு வயிற்றைப் பிசைந்து பிசைந்து விட்டது.

''வாங்க... உள்ளே போலாம்...''

நாற்காலியில் உட்கார்ந்திருந்த குல்லா அணிந்த மார்வாடிகள், தீர்த்தகிரியையும் பத்மாவையும் வேடிக்கை பார்க்க - அவர்கள் உள்ளே போனார்கள்.

போர்டிகோ படியேறும் போது -

ஹாலில் கும்பல் கும்பலாய் உட்கார்ந்திருந்த பெண்கள் கண்ணில் பட்டார்கள்.

''அனி... தா...!''

பத்மா அலறலோடு உள்ளே ஓடினாள். தீர்த்தகிரி வேகமாய் போனார்.

அனிதாவை -

ஹாலின் நடுவே கிடத்தியிருந்தார்கள்.

சிவப்பு நிற பட்டுப்புடவையை கழுத்துவரை போர்த்தி தலையில் வெள்ளையாய் பேண்டேஜ் சுற்றியிருந்தார்கள். கழுத்தில் கனமான ரோஜாமாலை.

முகம் தீய்ந்துபோய் கரிக்கட்டையாய் தெரிந்தது.

அந்த முகத்தில் மஞ்சள் அப்பி - நெற்றியின் நடுவே பெரிதாய் குங்குமப் பொட்டு வைத்திருந்தார்கள். ஹால் பூராவும் ஊதுவத்தி வாசனை.

உட்கார்ந்திருந்த் பெண்கள் விலகிக் கொள்ள - பத்மா ஓடிப்போய் - அனிதாவின் தீய்ந்து போன சடலத்துக்கு அருகே மண்டியிட்டு உட்கார்ந்து - பெருங்குரலெடுத்து அழுது - அதிர்ச்சியை ஜீரணிக்க முடியாமல் ஆழமான மயக்கத்துக்குப் போனாள்.

அனிதாவின் பத்தாம் நாள் காரியங்கள் முடிந்து - அன்று மாலை ஊருக்கு புறப்படும் நிமிஷங்களில் இருந்தார்கள் தீர்த்தகிரியும் பத்மாவும்.

இந்த பத்து நாட்களில் -

பத்மா நிஜமாகவே பாதியாய் கரைந்து போயிருந்தாள். தன்னை மறந்து தூங்குகிற நேரம் தவிர - மற்ற நேரம் பூராவும் அழுதாள். எல்லோருடைய வற்புறுத்தலுக்காக சாப்பாட்டை விஷம் போல் பாவித்து விழுங்கினாள்.

தீர்த்தகிரி மட்டும் துக்கத்தை ஜீரணித்துக் கொண்டு சகஜ நிலைக்குத் திரும்பியிருந்தார். கண்களில் மட்டும் சோகம் பாக்கியிருந்தது.

''பிருதிவ்...''



லட்சுமி நாராயணன் பங்களாவின் உட்பக்கமாய் திரும்பி குரல் கொடுத்தார். பிருதிவ் மோவாயில் வளர்ந்திருந்த பந்து நாள் தாடியை இடது கையால் தடவிக் கொண்டே சோகமான முகபாவத்தோடு உள்ளேயிருந்து வந்தான்.

''என்னப்பா...?''

''காரை எடுத்துக்கிட்டு ஏர்போர்ட் வரைக்கும் போயிட்டு வந்துடு... சம்பந்தி... நீங்க தைரியமாயிருந்து உங்க மனைவிக்கு ஆறுதல் சொல்லுங்க... உங்க மக இல்லாமே போனதினால் நமக்குள்ள இருந்த சொந்தம் அத்துப்போயிடலை... நீங்க எப்பவேணுமானாலும் வரலாம்...''

தீர்த்தகிரி தலையாட்டிக் கொண்டே கைகளைக் குவித்தார்.

''அப்போ... நாங்க புறப்படறோம்...''

பத்மாவின் தோளைப்பற்றி ஆதரவாய் நடத்திக் கொண்டு காருக்கு போனார் தீர்த்தகிரி... பிருதிவ் முன்னாடியே போய் காரின் பின்பக்கக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு காத்திருந்தான்.

இருவரும் காருக்குள் போனதும் -

கார் காம்பௌண்ட் கேட்டைத் தாண்டியதும் -

கார் கதவை அடக்கமாய் சாத்தி - டிரைவர் சீட்டுக்குப்போய் காரை கிளப்பிக் கொண்டு காம்பௌண்ட் கேட்டைத்தாண்டினான்.

போர்டிகோ வராந்தாவில் நின்றிருந்த லட்சுமி நாராயணனும், கமலமும் ஒருத்தரையொருத்தர் பார்த்து புன்னகைத்துக் கொண்டார்கள்.

லட்சுமி நாராயணன் மெல்லிய குரலில் கேட்டார்.

''என்ன கமலம்... நாம மெரீன் ட்ரைவ் பங்களாவுக்கு போலாமா...?''

''கொஞ்சம் பொறுங்க... ஏர்போர்ட்டிலிருந்து பிருதிவ்வும் வந்துரட்டும்...''

''அவனுக்காக நாம காத்திட்டிருக்க வேண்டாம் கமலம்... நான் அவன்கிட்டே ஏற்கனவே சொல்லிட்டேன்... பிருதிவ் ஏர்போர்ட்டிலிருந்து நேரா மெரீன்ட்ரைவ் பங்களாவுக்கு வந்துடுவான்... நாம புறப்படலாம்...''

''சரி கிளம்புங்க....''

போர்டி கோவின் வலது கை பக்க ஓரமாய் நின்றிருந்த டால்பின் காரை நோக்கிப் போனார்கள் இருவரும். கமலம் பேசிக்கொண்டே காருக்குள் போனாள்.

''பாவம் அனிதாவோட அம்மா.... அனிதாவுக்காக கதறி தீர்த்துட்டா....''

''என்ன... சம்பந்தி அம்மா மேல பரிதாபமா?''

லட்சுமி நாராயணன் சிரித்துக்கொண்டே டால்பினை நகர்த்தி வீதிக்குக் கொண்டு வந்து பறந்தார்.

''என்னங்க....?''

''ம்....''

''அனிதாவோட சாவு சம்பந்தமா யாரும் நம்ம மேல சந்தேகப்படலையா....?''

''ஊ...ஹ...ம்....''

''போலீஸ்....?''

''போலீஸ் வாயைத்தான் ரெண்டு நாளைக்கு முன்னாடியே பத்தாயிரம் ரூபாய் 'மொய்' வெச்சு சாத்தியாச்சே கமலம்.... போஸ்ட்மார்ட்டம் பண்ணின டாக்டர் குப்தாவுக்கு அஞ்சாயிரம்... குடுத்து அவர் வாயையும் தெச்சாச்சு...''

''பொண்ணைப் பெத்தவங்களுக்கு எந்த சந்தேகமும் வந்திருக்காதே...?''

''நிச்சயமா வந்திருக்காது.... நீ ஏன் அதைப்பத்தியே நினைச்சுட்டிருக்கே கமலம்....? நாம போட்ட திட்டம் எண்ணிக்காவது சோடை போயிருக்கா....?''

கார் மெரீன் டிரைவ் ரோட்டில் பிரவேசித்து - கும்பல் கும்பலாய் ஓடும் கார்களுக்குப் பின்னால் ஓடியது. தொலைவில் அரபிக்கடல் நீலச்சாயம் தீற்றின மாதிரி தெரிய மும்பை ஜனங்கள் மெரீன் ட்ரைவ் பேவ்மெண்ட் சிமெண்ட் பெஞ்சுகளில் உட்கார்ந்து கடல்காற்றை சுவாசித்து பேல்பூரி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் தூரத்தில் மேட்டுப் பகுதியில் மலபார் ஹில்ஸ் நெருக்கமான கட்டிடங்களோடு தெரிந்தது.

காரை எண்பதில் விரட்டி -

மெரீன் ட்ரைவ் ரோட்டின் கோடியில் இருந்த - 'அஜ்மல் அவென்யூ'வில் திரும்பி - பிறகு வந்த பூதாகரமான



கட்டிடங்களைத் தாண்டி - அந்த க்ரே நிற டிஸ்டெம்பர் பூசப்பட்ட சின்ன பங்களாவுக்கு முன் வந்து நின்றது.

உள்ளே நின்றிருந்த வாட்ச்மேன் கூர்க்கா ஓடி வந்து காம்பௌண்ட் கேட்டைப் பிளந்துவிட டால்பினை உள்ளே கொண்டு போனார் லட்சுமி நாராயணன்.

போர்டி கோவில் ஐக்கியப்படுத்திவிட்டு -

இருவரும் இறங்கினார்கள்.

ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டார்கள். லட்சுமி நாராயணன் வாசற்படி ஏறி காலிங் பெல்லின் மேல் கையை வைத்தார். அது உள்ளே 'கிர்ர்' என்று எதிரொலித்தது.

சிறிது நேர அவகாசத்திற்குப் பிறகு -

ஒரு வயதான அம்மாளின் முகம் பக்கவாட்டு ஜன்னலில் தெரிந்தது. கமலம் அவளைப் பார்த்து சொன்னாள். ''மல்லம்மா...! நாங்க தான்... கதவைத் தொற....''

அந்த மல்லம்மா பதட்டமாய் கதவைத் திறந்து விட்டாள்.

லட்சுமிநாராயணனும், கமலமும் உள்ளே நுழைந்ததும் அதே பதட்டத்தோடு கதவைச் சாத்தி தாழிட்டாள்.

''என்ன மல்லம்மா.... பொண்ணு என்ன சொல்றா...?''

மல்லம்மா நெட்டுயிர்த்தாள்.

''ரொம்பவும் அடம்பிடிக்குதுங்க... மிரட்டி மிரட்டி தான சாப்பிட வெக்க வேண்டியிருக்கு... எந்நேரம் பார்த்தாலும் அழுகைதான்....''

''சிராம்தயாள் எங்கே....?''

''உள்ளாரதான் அந்த பொண்ணு ரூம்க்கு காவ இருக்கான்.''

''சரி... வா... போய் பார்க்கலாம்....''

பங்களா ஹாலில் நடந்து - மாடிப்படிகளுக்குக் கீழ் தெரிந்த ஓர் அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனார்கள். தரைப் பகுதிக்கு கீழ் சரசரவென்று சரிந்த மரப்படிகளில் இறங்கி, மறுபடியும் சமதளத்துக்கு வந்து நடந்தார்கள்.

அந்த அறை வந்தது. கம்பிகளால் வேயப்பட்ட அறை பூட்டப்பட்ட அந்த அறைக்கு முன்னால் உட்கார

ருந்த ராம்தயாள் - லட்சுமி நாராயணனையும், மலத்தையும் பார்த்தவுடன் எஜமான விசுவாசத்தோடு டி வந்தான்.

ராம்தயாளுக்கு காட்டெருமை உடம்பு. மாட்டு ாமிசத்தை தினமும் சாப்பிட்டு உடம்பில் மூர்க்கத் னத்தை நிரப்பி வைத்திருந்தான். லட்சுமி நாராயணன் காண்டு வரும் எந்த பசுமாட்டையும் இந்த ராம்தயாள் ன்கிற மூர்க்கமான மாடு தான் படிய வைக்கும்.

''என்னராம்தயாள்....மான்குட்டி எப்படி...?''

''ரொம்பவும் துள்ளுதுங்க... நீங்க உத்தரவு கொடுத்தா மிஷத்துல அடக்கிடுவேன்...'' ராம்தயாள் தன் சிங்கமான பல்வரிசையில் இளித்தான்.

''அதெல்லாம் வேண்டாம் ராம்தயாள்... அந்தப் பாண்ணு ஒரு பூ மாதிரி... பூவை வளைக்கிறதுக்கு ன்னை மாதிரியான இரும்பு கத்தியெல்லாம் வேண் ாம்.... இன்னும் கொஞ்ச நேரத்துல பிருதிவ் வந்துடு ான்...அவன்வந்ததும் அவளைசரிக்கட்டற பொறுப்பை வன்கிட்டே குடுத்துடுவோம்... இப்ப.... நீ ரூமோட தவைத்திற... பொண்ணு எப்படியிருக்கான்னு ாக்கலாம்....''

ராம்தயாள் தன் பெல்ட்டின் மடிப்பிலிருந்த சாவியை டுத்து... அறைக் கதவைத் திறந்து விட்டான்.

''என்னம்மா....அனிதா....எப்படியிருக்கே....?''

கைகளிலும், கால்களிலும் கட்டப்பட்ட இரும்புச் ங்கிலிகளோடும் - கண்களில் கண்ணீரோடும் குப்புறப் டுத்திருந்த அனிதா நடுக்கத்தோடு திரும்பினாள்.

கண்களுக்குள் ஏராளமான பயம்.

## 6

அனிதா கடந்த பதினைந்து நாட்களில் வெகுவாய் லர்ந்து போய் இருந்தாள். தன்னை மறந்து தூங்குகிற நரம் தவிர மற்ற நேரம் பூராவும் பயப்பட்டாள். ம்தயாளோ மல்லம்மாவோ பக்கத்தில் வரும் போது ான்குட்டித்தனமாய் மருண்டாள்.

அன்றைக்கு லட்சுமிநாராயணனும் கமலமும் ந்தபோது மனசுக்குள் பீறிட்ட துக்கத்தோடு



அவர்களைப் பார்த்து கும்பிட்டாள்.

''என்னை ஒண்ணும் பண்ணிடாதீங்க... எங்கம்ம அப்பாகிட்டே கொண்டு போய் விட்டுடுங்க... எனக்கு பயமாயிருக்கு...'' கைகளிலும் கால்களிலும் மாட்டி யிருந்த சங்கிலிகள் கணகணவென்று சத்தத்தை எழுப் கதறினாள் அனிதா.

கமலம் அவளருகே வந்தாள். பாசாங்குத்தனமாக பாசத்தோடு, அனிதாவின் தலையைத் தடவினாள்

''எதுக்காக பயப்படறே அனிதா...? இனிமே உங்க அப்ப அம்மாவைப் பத்தி நீ நினைக்கக் கூடாது... உன்னை பார்த்துக்க நாங்க இல்லையா...? நாங்க சொன்னபடி கேக்கிறதாயிருந்தா நீ மகாராணி மாதிரி இருக்கலாம்....''

கமலம் பேசப் பேச ஆக்ரோஷமாய்ப் பார்த்தாள் அனிதா.

''ச்சீ...! நீயெல்லாம் ஒரு பொம்பளையா...? ராட்சசி... ரத்தக் காட்டேரி...! நீ என்னை ஏமாத்திட்டே.... உன்னை உன்னை...'' கையில் கட்டப்பட்டிருந்த சங்கிலியால் கமலத்தின் முகத்தில் சப்பென்று அறைந்தாள் அனிதா.

''அம்மா...'' கமலம் துடித்து நிமிர்ந்தாள்.

நெற்றிப் பொட்டில் புதிதாய் ஒரு காயம் பிறந்து ரத்தம் எட்டிப் பார்த்தது. தீயால் சுட்ட மாதிரி சுரீரென்று வலி.

கோபமானாள் கமலம்.

''டேய்...ராம்தயாள்...''

''மா...ஜீ...''

ராம்தயாள் தன் காட்டெருமை உடம்போடு பவ்வியமாய் ஓடி வந்தான். கமலம் அவன் பக்கமாய் திரும்பினாள். ''அவ உடம்புல ஒரு பொட்டு துணி இல்லாமே அத்தனையும் உருவுடா... அவ திமிரை இன்னிக்குதான் அடக்கறேன்....''

ராம்தயாள் இளித்தான். அனிதாவின் உடம்பின் மேல் விழ எப்போது அனுமதிப்பார்கள் என்ற ஆவலோடு காத்திருந்தவனுக்கு உற்சாகம் பீறிட்டது.

அனிதாவின் பக்கமாய் தன் ராட்சத உடம்பைத் திருப்பினான்.

அனிதா பயத்தில் உறைந்தாள்.

''வேண்டாம்... என் பக்கத்துல வராதே...'' வீறிட்டுக் கொண்டே எழுந்தாள் அனிதா. லட்சுமிநாராயணன் ஒரு

ன்னகையோடு நாற்காலியை அழுத்திப் போட்டு ட்கார்ந்து சிகரட் கேசை எடுத்துக் கொண்டார்.

அனிதாவின் நிஜமான அழகை தரிசிக்க ஆவலானார்.

மலம் நெற்றிக் காயத்தை கர்ச்சீஃபை வைத்துக் கட்டி - த்திரமாய் நின்றிருந்தாள்.

ராம்தயாள் அதே இளிப்பை கொஞ்சம்கூட குறைக் ாமல் - சிலிர்த்துக் கொண்டே அனிதாவை நெருங்கி ான்.

"நோ..."

அனிதா சங்கிலிகளை உதறினாள். எம்பினாள். "கிட்டே ராதே...!" கோபமாய் கர்ஜித்துவிட்டு அழுதாள். ராம் யாள் அவளுடைய ஆர்ப்பாட்டத்தை பொருட்படுத் ாமல் நெருங்கி - சுலபமாய் அவள் கழுத்தைப் பற்றினான்.

அப்படியே தூக்கினான்.

"அம்மா ஆ... ஆ... ஆ..."

நீளமாய் - நீளமாய் வீறிட்டாள் அனிதா.

கமலம் சொன்னாள் கோபமாய். "கத்தற வாய் மேல ரண்டு போட்றா... ராம்தயாள்..."

அவள் சொல்லச் சொல்லவே பளீரென்று அறைந்து சலையை உருவினான் ராம்தயாள். சேலை வெகு செவாசமாய் அவன் கைகளுக்குள் சுருண்டு கொண்டது.

பெட்டிக்கோட்டோடும், ஜாக்கட்டோடும் வெட்கிப் போய் உட்கார முயன்றாள் அனிதா. ராம்தயாள் விடாமல் அவளுடைய தலைமுடியைப் பற்றித் தூக்கினான். வலி தாங்காமல் அரற்றிய அவளை பொருட்படுத்தாமல் - ஜாக்கட்டைப் பற்றி -

"டர்ர்ர்..."

அனிதாவின் தோள்பட்டை தோல் சீவிய சுரவள்ளிக்கிழங்கு நிறத்தில் தெரிய, பார்த்துக் கொண்டிருந்த லட்சுமி நாராயணனுக்கு வாயில் நீர் ஊறியது. கத்தினார்.

"அவளை சீக்கிரம் உரிடா ராம்தயாள்..."

ராம்தயாள் அனிதாவை ஆக்ரமித்தான். இடதுகையால் பெட்டிக்கோட்டையும், வலதுகையால் ஜாக்கட்டையும் பற்றி ஒரே மூச்சில் இழுக்க -

"ராம்தயாள் நிறுத்து..."



கோபமான குரல் கேட்டு எல்லாரும் திரும்பினார்கள்.

பிருதிவ் நின்றிருந்தான்.

அவனைப் பார்த்ததும் லட்சுமி நாராயணன் மலர்ந்தார்.

"வா... பிருதிவ்... அவங்களை ஃபிளைட் ஏத்தி விட்டுட்டியா...? இப்படி வந்து உட்கார்... அனிதாவோட உடம்பு முதல் தடவையா அரங்கேறப் போவுது..."

"பாஸ்...."

பிருதிவ் குறுகிப்போன குரலில் கூப்பிட்டான்.

"என்ன பிருதிவ்...?

"நா ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே...?"

"என்ன சொல்லப் போறே?"

"அனிதாவை நம்ம வழிக்குக் கொண்டு வரணும்ன்னா அதுக்கு வழி இது இல்லை... அப்படி ரொம்பவும் அரக்கனா அவகிட்ட பிஹேவ் பண்ணினா அவளுக்கு மெண்டல் டிஸ்ஆர்டரே வந்துடும்... மனநிலை பாதிக்கப் பட்டா அதுக்கப்புறம் அவ நமக்கு பிரயோஜனப் படமாட்டா... இத்தனை நாள் பட்ட கஷ்டத்துக்கு பலனே இல்லாமே போயிடும்..."

கமலம் பிருதிவ்வை ஏறிட்டாள்.

"இரும்புச் சங்கிலியாலே என்னை அடிச்சுட்டா பிருதிவ்... திமிரை அடக்கத்தான் ராம்தயாளை விட்டு அவ உடம்புத்துணியை அவுத்துப்போடச் சொன்னேன்..."

"மன்னிக்கணும் மேடம்... அவளை நம்ம வழிக்கு கொண்டு வர்ற வரைக்கும் இந்த மாதிரியான எண்ணற்ற கஷ்டங்களைத் தாங்கிக்கத்தான் வேணும்... இன்னும் ரெண்டு மணி நேரத்திலே நான் அவளை வழிக்கு கொண்டு வர்றேன்..."

"உன்னாலே முடியலைன்னா...?"

"என்னால முடியலைன்னா... அப்புறம் உங்க இஷ்டத்துக்கு விட்டுடறேன்... ராம்தயாள் அவளை வழிக்கு கொண்டு வரட்டும்..."

"சரி... முயற்சி பண்ணு..." லட்சுமிநாராயணன் சொல்ல - பிருதிவ் அனிதாவை நோக்கி மெல்ல நடந்துபோய் ராம்தயாளின் கையினின்றும் அவளை விடுவித்து - கீழே கும்பலாய் கிடந்த சேலையை எடுத்து அவள் மேல

பார்த்தினான்.

ராம்தயாள் பிருதிவ்வை முறைத்தான்.

''அந்தப் பக்கம் போடா... காட்டெருமை...'' அவனை விரட்டி விட்டு லட்சுமிநாராயணனிடம் திரும்பினான் பிருதிவ்.

''நீங்களும் மேடமும் வெளியே போயிடுங்க பாஸ்... ரெண்டு மணி நேரத்திலே உங்களுக்கு ஒரு நல்ல 'சல்ட்டை சொல்றேன்...''

லட்சுமிநாராயணனும் கமலமும் நகர்ந்தார்கள். ம்தயாள் இன்னமும் நின்று கொண்டிருக்க அவனுடைய தோளைப் பிடித்துத் தள்ளினான், பிருதிவ்.

''உனக்கும் சேர்த்துத்தாண்டா சொன்னேன் தடி ண்டம்... உடம்பை வளர்த்தின ஆர்வத்தில நூத்துல ஒரு ங்கு ஆர்வத்தையாவது செலவழிச்சு... கொஞ்சம் ளையையும் வளர்த்திருக்கலாமேடா... சாத்துருண்டை....''

அரைகுறையாக தமிழ் அறிந்த ராம்தயாள் ஏதோ ட்டுகிறான் என்பதைப் புரிந்து கொண்டு மொட்டைத் லையை தடவியபடியே நகர்ந்தான்.

அவன் வெளியேறியதும் -

கதவை உட்பக்கமாய் தாழிட்டான் பிருதிவ்.

பிறகு திரும்பி அனிதாவை நோக்கி வந்தான்.

''வராதே... எம் பக்கத்துல வராதே...''

''அனிதா...''

பாகை இழைந்த மாதிரியான குரலில் கூப்பிட்டான்.

''பாவி... பாவி.... என்னோட வாழ்க்கையை நாசம் ண்ணிட்டியேடா பாவி...'' - அனிதா உஷ்ணமாய் ார்த்தைகளைக் கொட்டிக் கொண்டே பின்னுக்குப் பானாள்.

''அ...னி...தா...''

பிருதிவ்வின் குரல் லேசாய் தழுதழுத்தது.

அனிதா - அவனுடைய குரலின் நெகிழ்வை உணர்ந்து கொஞ்சம் ஆச்சர்யமாய் அவனைப் பார்த்தாள். அவன் சொன்னான் மெல்லிய - நடுங்கும் குரலில்.

''அனிதா... என்னை நம்பு... நான் பழைய பிருதிவ் ல்லை...''



அனிதா நம்பாத தன்மையோடு அவனையே பார்த்தா

பிருதிவ் அவளுடன் வந்து உட்கார்ந்தான். இப்பத்தா உன்னோட அம்மாவையும், அப்பாவையும் சென்னைக் ஃப்ளைட் ஏத்திவிட்டுட்டு வர்றேன்...''

அனிதா பிரகாசமானாள்.

''என்னோட அம்மாவும் அப்பாவும் வந்திருந்தா களா...? எப்போ வந்தாங்க...?''

''அவங்க பத்து நாளைக்கு முன்னாடியே வந்துட்டாங்க....''

''எதுக்காக வந்தாங்க...?''

பிருதிவ் பதில் சொல்லாமல் மோவாயைத் தேய்த்தான்.

''ம்... சொல்லுங்க... எதுக்காக வந்தாங்க...? படபடத்தாள் அனிதா. பிருதிவ் குரலை வெகுவா தாழ்த்திக் கொண்டான். ''அனிதா நீ தீ விபத்துல சிக் செத்துட்டதா உங்கப்பா அம்மாவுக்கு தந்தி குடுத் வரவழைச்சாங்க, மயானத்துல புதைச்சுட்டுப் போன ஒ பெண்ணோட டெட்பாடியை தீயிலே கருக்கி - பாத்ரூம்லே போட்டு அதை நீதான்னு எல்லாரையும் நம் வைச்சாங்க... போலீஸுக்கும், போஸ்ட்மார்ட்டம் பண்ணின டாக்டருக்கும் பணத்தைக் கொட்டி வாயை அடைச்சாங்க... இந்த பத்து நாளும் துக்கவேஷம் போட் இன்னிக்கு பத்தாவது நாள் காரியத்தையும் நடத் முடிச்சுட்டாங்க...''

அனிதா திக்பிரமை பிடித்துப் போய் உட்கார்ந்திருந்தாள்

''ஐயோ...! அம்மா என்னோட சாவுச் சேதியை எப்ப ஜீரணித்துக் கொண்டாள்?''

''உன்னோட அம்மாவும் அப்பாவும் அடிக்கடி உன்னை தேடிட்டு வராமே இருக்கத்தான் இந்த சாவு நாடகம்... இனிமே இவங்க உன்னை எப்படி வேணும்ன்னாலு நடத்தலாமே...''

''நீங்க... எப்படி... திடீர்ன்னு எம்மேல...?'' - அனித இன்னமும் நம்பாமல் வார்த்தைகளை இழுத்து இழுத் கேட்டாள்.

''அனிதா'' கசப்பாய் புன்னகைத்தான் பிருதிவ் ''தால கட்டுகிற விநாடி வரை என்னோட மனசும் வக்ரமாகத்தா இருந்தது. தாலி கட்டின நிமிஷத்திலிருந்

மனசுக்குள்ளே ஒரு மாறுதல்... நீ எனக்கு மட்டுமே
ரந்தங்கிற மாதிரி ஒரு உணர்ச்சி. அந்த உணர்ச்சி
ஞ்சம் கொஞ்சமா என்னை மாத்த ஆரம்பிச்சுடுச்சு.
ன்னிக்கு ஃப்ளைட் ஏறும்போது உங்கம்மா அழுத
முகை இருக்கே அந்த அழுகைஎன்னோட உடம்பையே
க்கிடுச்சு அனிதா. நான் மனிதாபிமானத்தை கழட்டி
ச்சுட்டு எத்தனையோ சட்ட விரோதமான
ரியங்களைப் பண்ணினவன்தான்... இருந்தாலும் ஒரு
முகைக்கு நான் அடிமையாயிட்டேன். 'அனிதாதான்
களுக்கு இல்லேன்னு ஆயிட்டா.... நீங்களாவது
ருக்கு வர்றப்போ... வீட்டுக்கு வந்து மாப்பிள்ளையா
நாள் இருந்துட்டுபோங்க'ன்னு உங்கப்பா சொன்னப்ப
ரோட கண்ணுல எனக்கே தெரியாம கண்ணீர்..."

அனிதா மகிழ்ச்சியில் தத்தளித்தாள்.

பிருதிவ் தொடர்ந்தான்.

"நான் ஏர்போர்ட்டிலிருந்து கார்ல வர்றப்பவே ஒரு
டிவுக்கு வந்துட்டேன் அனிதா... நீயும் நானும்
ங்கேயிருந்து தப்பிச்சு உங்க ஊருக்கு போயிடப்
றோம்... லட்சுமி நாராயணனை போலீஸ்க்கு
டையாளம் காட்டப்போறோம்.... போலீஸ்க்கு நான்
ருவரா மாறி எல்லா உண்மைகளையும் சொல்லப்
றேன்..."

அனிதா பிருதிவின் கையை எடுத்து கன்னத்தோடு
வத்துக் கொண்டாள். பல நாள் கழித்து பல் வரிசை
ரிய சிரித்தாள்.

"என்னை எப்படி தப்பிக்க வெக்கப் போறீங்க?"

புன்னகைத்தான் பிருதிவ்.

"கைவசம் ஒரு கச்சிதமான ஐடியா இருக்கு... அனிதா!"

"என்ன...?"

"தினசரி ஒவ்வொரு ராத்திரியும் பத்து மணிக்கு நானும்,
ட்சுமி நாராயணனும், கமலமும் அவங்க வீட்ல வெச்சு
க்கர் சாப்பிடுவோம். இன்னிக்கி ராத்திரியும் சாப்பிடப்
றோம். அவங்க ரெண்டு பேரும் சாப்பிடற விக்கர்ல
ட்டிவ் டேப்லட் கலந்துடப் போறேன். காலைல பத்து
ணிவரைக்கும் அந்த மாத்திரை அவங்களை
க்கையிலிருந்து எழவிடாது. அவங்க விக்கர் சாப்பிட்டு



சாஞ்சதுமே நான் வெளியே வந்து பப்ளிக் டெலிபோ
பூத்திலிருந்து லட்சுமி நாராயணன் பேசுகிற மாதிரி ரா
தயாளுக்கு போன் பண்ணுவேன். "ராம்தயாள்! பிருதி
அங்கே வர்றான்... அனிதாவை அவனோட அனுப்
வை...!" இதுதான் லட்சுமி நாராயணன் குரல்ல நா
பேசப்போற வார்த்தைகள். போன் பண்ணிட்டு நே
இங்கே வருவேன். ராம்தயாள் என்கூட உன்னை அனுப்
வைப்பான். நாம நேரா ஏர்போர்ட் போறோம்... 11.
சென்னை ஃப்ளைட்டை பிடிச்சு பறக்கிறோம்..."

"ப்ளைட் டிக்கெட்...?"

"வாங்கிட்டேன்... ரூம்ல வெச்சிருக்கேன்..."

"எனக்கு பயமா இருக்குங்க..."

"எந்த பயமும் வேண்டாம் அனிதா... தைரியமாயிரு
நானிருக்கேன்..."

அவன் சொல்லச் சொல்ல -

பூட்டியிருந்த அந்த அறைக்கதவைத் தட்டினார்கள்

"தட்... தட்... தட்..."

எழுந்து போய் கதவைத் திறந்தான் பிருதிவ்.

அறைக்கு வெளியே -

லட்சுமிநாராயணனும் கமலமும் நின்றிருந்தார்க
அவர்களுக்குப் பின்னால் ராம்தயாளின் மொட்டை
தலை தெரிந்தது.

"என்ன பாஸ்...?"

"உள்ளே என்ன பண்ணிட்டிருக்கே பிருதிவ்..
அரைமணி நேரமா ஒரு சத்தத்தையும் காணோம்
உன்னை ஏதாவது தாக்கி மயக்கப்படுத்திட்ட
ளோன்னுதான் கதவைத் தட்டினோம்."

பிருதிவ் புன்னகைத்தான். "அனிதாகிட்ட சாத்வீக
போராடினாத்தான் அவ நமக்கு படிஞ்சு வருவா பாஸ்.
அடம் பிடிச்சா என்னாகும்? அனுசரிச்சுப் போனா என்
கிடைக்கும்...? இதையெல்லாம் விலாவரியா எடுத்
சொல்லிட்டிருந்தேன்."

"குட்... என்ன சொல்றா...?"

"இன்னும் ஒரு பதிலையும் சொல்லலை பாஸ்
இன்னும் கொஞ்ச நேரம் கரைச்சா இந்த கல்
கரைஞ்சிடும்... அதுக்குள்ள நீங்க கதவை

ட்டிட்டீங்க..."

"பிருதிவ்..." கமலம் கூப்பிட்டாள்.

"மேடம்..."

"நீ அவளை எப்படியும் வழிக்குக் கொண்டு வந்திடுவேங்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு. அப்ப ஒரு காரியம் பண்ணு...அனிதா காலையிலிருந்து எதுவுமே சாப்பிடலையாம்... அவ சாப்பிடாம பட்டினி கிடந்தா நஷ்டம் நமக்குத்தான்... சாப்பிடாம குச்சியாட்டம் இளைச்சிட்டா வர்றவன் நல்ல விலைக்கு கேக்க மாட்டான்... இவ விலைக்கு போகிறவரைக்காவது சாப்பிட்டு நல்லா இருக்க வேண்டாமா...? மொதல்ல அவளை சாப்பிட வை..."

"மேடம்! சாப்பாட்டை கொண்டு வரச்சொல்லுங்க.. அனிதாவை நான் சாப்பிட வெக்கறேன்..."

"எனக்கு வேண்டாம்..." அனிதா கத்தினாள்.

அனிதாவின் பக்கமாய் திரும்பினான் பிருதிவ்...

"இதோ பார் அனிதா... நான் உனக்கு ஏற்கனவே சொல்லியிருக்கேன்... முரண்டு பிடிச்சு ஒரு பிரயோஜனமும் இல்லை... உன்னோட வாழ்க்கை இனிமே இதுதான்னு நாங்க நிர்ணயம் பண்ணிட்டோம்... இந்த வாழ்க்கைக்கு ஒத்துப் போறதைத் தவிர வேறு வழியே இல்லை... நீ அடம் பிடிச்சா ராம்தயாள் வருவான். அவன் ஒரு காட்டெருமை மாதிரி... செக்ஸுக்காகவே அவனை வளர்க்கிறோம்... அவன் உம்மேல பாய ஆரம்பிச்சான்னா நீ தாங்க மாட்டே..."

அனிதா தன் அழகிய கழுத்துப் பரப்பில் வியர்த்து - மிரட்சியோடு பார்த்து எச்சில் விழுங்கினாள். திணறி திணறிச் சொன்னாள்.

"சா...சாப்பிடறேன்..."

"குட்... ராம்தயாள்! அந்த சாப்பாட்டு கேரியரை எடுத்துட்டு வா..." பிருதிவ் சொல்ல - ராம்தயாள் புரிந்து கொண்டு சாப்பாட்டை எடுத்துவர உள்ளே போனான்.

லட்சுமிநாராயணன் பிருதிவ்வை நெருங்கி வந்து அவன் தோளைத் தட்டினார். "பரவாயில்லையே... உனக்கு கொஞ்சம் படியறா..."

"இன்னும் ஒரு மணி நேரத்துல அனிதாவை



நாய்க்குட்டி மாதிரி பழக்கிடுவேன் பாஸ்... அதுக்காக எனக்கு நீங்க ஸ்பெஷல் ஃபீஸ் தரணும்..."

"நாளைக்கு காலையில பார்ட்டியைக் கூட்டிட்டு வர்றப்போ அவ முரண்டு பண்ணாம இருக்கட்டும்... நீ கேட்டதை நான் தர்றேன்..."

"ஷ்யூர்...பாஸ்...அனிதா எம் பேச்சை மட்டுமில்லே... உங்க எல்லாருடைய பேச்சையும் கேட்பா... நாளைக்கு காலையில நீங்க இங்கே வர்றப்ப அனிதா உங்களுக்கு குட்மார்னிங் சொல்லுவா... போதுமா...?"

ராம்தயாள் சாப்பாட்டுக் கேரியரோடு வந்தான். பிரதீப் லட்சுமிநாராயணனுக்கு மிக அருகே வந்து மெல்லிய குரலில் சொன்னான். "பாஸ்... நீங்க எல்லாருமே வெளியே போயிடுங்க... நான் இன்னும் அவளை கரைக்கணும்... சாப்பிட வெச்சுக்கிட்டே பேசணும்..."

"நீ அவளை சரி பண்ணிட்டு... நம்ம மாதுங்கா பங்களாவுக்கு எப்ப வருவே பிருதிவ்...?"

"வழக்கம் போல பத்துமணி பார்ட்டிக்கு வந்துடறேன்... பாஸ்..."

"நானும் கமலமும் இப்ப பங்களா போறோம்... நல்ல நியூஸோட பங்களாவுக்கு வா... பார்ட்டி பஜன்லாலை போன் பண்ணி வரச்சொல்லிடலாம்..."

"சரி...பாஸ்..!"

லட்சுமிநாராயணனும், கமலமும் வெளியே போனார்கள். ராம்தயாள் விசுவாசமான தோம்பை நாய் மாதிரி வாசல் வரை அவர்களுக்குப் பின்னாலேயே போனான்.

பிருதிவ் கதவை சாத்தி தாழிட்டான். டிபன் கேரியரோடு அனிதா முன்னாடி உட்கார்ந்து எல்லாவற்றையும் பரப்பினான்.

"இத்தனை நாளைக்கப்புறம் இன்னிக்குத்தான் எனக்குப் பசிக்குது..." அனிதா புன்னகையோடு சொல்ல பிருதிவ் சிரித்தான்.

"மனசுல பயம் இருந்தா யாருக்குமே பசிக்காது... அனிதா அப்போ உனக்கு பயம் போயிடுச்சு... அதான் பசியெடுக்குது... சாப்பிடு... தப்பிச்சு ஓட பலம் வேண்டாமா...?"

''இன்னிக்கு ராத்திரி எத்தனை மணிக்கு நீங்க வருவீங்க...?''

''பத்தரை மணிக்கெல்லாம் இங்கே இருப்பேன்...''

''கண்டிப்பா வருவீங்களா...?''

''கண்டிப்பா வருவேன்... நாம தப்பிச்சப் போறது சர்வநிச்சயம்...'' பிருதிவ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே-

கதவருகே ஏதோ சத்தம் கேட்டது.

# 7

அந்தச் சத்தத்தை முதலில் கேட்டவள் அனிதாதான். முகம் வெளிறிப்போய் பிருதிவ்வை ஏறிட்டாள்.

''என்னங்க... யாரோ கதவுகிட்டே நின்னுக்கிட்டு இருக்காங்கன்னு நினைக்கிறேன்... ஆள் நகர்ற சத்தமும், கால் மாத்தி நிற்கிற சத்தமும் கேட்குது...''

பிருதிவ் காதுகளுக்கு கூர்மையைக் கொடுத்து உன்னிப்பாய் கவனித்தான். அரை நிமிஷத்துக்குப் பின் அந்த சத்தம் கேட்டது.

யாரோ லேசாய் கதவை பிறாண்டுகிற சத்தம்.

அனிதாவின் அருகே உட்கார்ந்திருந்த பிருதிவ் மெதுவாய் எழுந்தான். அனிதா பதட்டமாகி மெல்லிய குரலில் சொன்னாள். ''என்னங்க...! ஜாக்கிரதை... அந்த ராம்தயாள்தான் கதவுகிட்டே நின்னுட்டிருப்பான்னு நினைக்கிறேன்... ஆத்திரப்பட்டு அவன்கூட மோதிடாதீங்க...''

பிருதிவ் தன் உதட்டில் ஆட்காட்டி விரலை வைத்து 'பேச வேண்டாம்' என்று அனிதாவை எச்சரித்து விட்டு - பூனை மாதிரி நடந்து கதவருகே போனான்.

கதவை நெருங்கி - எதிர்பார்க்காத ஒரு விநாடியில் - பளிச்சென்று கதவின் தாழ்ப்பாளை விலக்கினான். கதவு பின்னுக்கு நகர -

கறுப்பு பூனையொன்று விருட்டென்று ஜன்னல் திட்டுக்குத் தாவி - வராந்தாவில் குதித்து ஓடியது.

அனிதாவை திரும்பிப் பார்த்தான்.

''பூனை'' என்றான். அனிதா சிரித்தாள். பிருதிவ் கதவை சாத்திவிட்டு மறுபடியும் அனிதாவிடம் வந்து



உட்கார்ந்தான்.

''சரியா பத்தரை மணிக்கு வர்றேன் அனிதா...''

''கண்டிப்பா வருவீங்களா...?''

''ஹண்ட்ரட் பர்செண்ட் கண்டிப்பா வருவேன்...''

''ராம்தயாளை நினைச்சா எனக்கு பயமாயிருக்கு...''

''லட்சுமி நாராயணனோட விரல் அசையாமே அவன் உனக்கு பக்கத்துல வரமாட்டான் அனிதா...''

அனிதா பிருதிவ்வையே கண்ணீரோடு பார்த்தாள்.

''என்ன அனிதா அழுறியா...?''

''என்னங்க... நாம நிஜமாவே தப்பிச்சுடுவோமா...?''

''நிச்சயமா!''

''எங்கப்பாவையும் எங்கம்மாவையும் மறுபடியும் என்னால பார்க்க முடியுமா?''

''கண்டிப்பா...''

''நீங்க இப்படி மாறினது என்னால நம்பவே முடியலைங்க...''

''நம்பு அனிதா நம்பு...''

அனிதாவின் கண்களில் துளிர்த்த நீரை தன் சுண்டு விரலால் ஒற்றினான் பிருதிவ். அவளுடைய தலையை இரண்டு கைகளாலும் பற்றிக்கொண்டு - சந்தனமாய் மினுமினுத்த நெற்றியில் தன் உதடுகளைப் பதித்து மெல்ல முத்தமிட்டான்.

''நான் புறப்படறேன் அனிதா... ரொம்ப நேரம் பேசிட்டிருந்தா அந்த ராம்தயாளுக்கு சந்தேகம் வந்துடும்... நான் போயிட்டு பத்தரை மணிக்கெல்லாம் வந்துடுவேன்.''

அனிதா தலையசைக்க-

பிருதிவ் எழுந்தான்.

இரவு மணி பத்து.

லட்சுமிநாராயணனும், கமலமும் ஜோடியாய் சோபாவில் சாய்ந்து - சோடா கலந்த விஸ்கியை சப்பிக் கொண்டிருக்க - எதிரே இருந்த நாற்காலியில் பிருதிவ் உட்கார்ந்திருந்தான்.

''என்ன பிருதிவ்! எங்களுக்கு ரெண்டு லார்ஜ் ஊத்தி கொடுத்துட்டு நீ பாட்டுக்கு கையில பீர் பாட்டிலை எடுத்துகிட்டே... ஸ்காட்ச் வேண்டாமா...?''

''வேண்டாம் பாஸ்... வயிறு சரியில்லை...'' லட்சுமி நாராயணன் சிரித்தார். ''வயிறு சரியில்லேன்னு நீ சொல்றே...! எனக்கென்னமோ இன்னிக்கு உன்னோட மூஞ்சியே சரியில்லைன்னு தோணுது... வாழ்க்கையில ரொம்பவும் அப்செட் ஆனமாதிரி இருக்கே...''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லபாஸ்...''

''ஓ.கே. உன்னை பத்தி அப்புறமா பேசுவோம்...அனிதா என்ன சொல்றா...? ரொம்ப நேரம் பேசிட்டிருந்த போலிருக்கு...''

''ஆமா பாஸ்...''

''என்ன சொல்றா...?''

''என்னோட பேச்சுக்கு கட்டுப்பட ஆரம்பிச்சிருக்கா...''

''பஜன்லாலுக்கு அவளைத் தள்ளிடலாமா...?''

''நான் ஒரு விஷயம் சொன்னா நீங்க கோபப்படக் கூடாது பாஸ்...''

''என்ன சொல்லப்போறே...?''

''அனிதாவுக்கு இந்த செக்ஸ் விஷயம் ரொம்பவும் அலர்ஜி. அந்த செக்ஸுக்கு அவளை படிப்படியா தயார் படுத்தனும்...''

''அதெல்லாம் பஜன்லால் அவளை சரிப்படுத்திடுவான். நாளைக்கு ராத்திரியே பஜன்லாலை வரச்சொல்லி பேரத்தைமுடிச்சுடுவோமா...?''

''அவசரப்படாதீங்கபாஸ்...''

லட்சுமி நாராயணன் கொஞ்சம் ஆச்சர்யத்தோடும் அதிகப்படியான கோபத்தோடும் பிருதிவ்வை பார்த்தார்.

''பிருதிவ்... உனக்கு என்னாச்சு...? நேத்தையிலிருந்து நீ சரியில்லை. எது சொன்னாலும் அந்த அனிதாவுக்கு பரிஞ்சுட்டு வர்றியே?''

''நான் பரிஞ்சுட்டு வரலை பாஸ்... அந்த அனிதாவை நாம வழிக்கு கொண்டு வரணும்ன்னா சின்னச் சின்ன நகாசு வேலையெல்லாம் பண்ணனும்... அனிதா மத்த பெண்கள் மாதிரியில்லை பாஸ்... ரொம்பவும் சென்சிட்டிவ் டைப்...''

''மயிலே மயிலே இறகு போடுன்னா மயில் போடாது பிருதிவ்... நமக்கு இறகு வேணுமின்னா அதைப் பிடுங்கித்தான் ஆகணும்...''



கமலம் விஸ்கி டம்ளரை காலிசெய்துவிட்டு டீபாயின் மேல் வைக்க முயன்று முடியாமல் அதை தவறவிட - கண்ணாடி டம்ளர் 'ஜில்லீர்ர்' என்றது.

லட்சுமிநாராயணன் கமலத்தின் பக்கமாய் திரும்பினார்.

''என்ன கமலம்... டம்ளரைப் பார்த்து வைக்கக்கூடாதா...?''

''இன்னிக்கு என்னமோ தெரியலைங்க... ஃபர்ஸ்ட் ரவுண்ட் முடிஞ்சதுமே கண்ணையெல்லாம் மசமசன்னு இருட்டிட்டு வருது...! பிருதிவ் இன்னிக்கு அதிகமா ஊத்திட்டான் போலிருக்கு!''

''இல்லையே... எப்பவும் போலத்தான் ஊத்தினேன்...''

''எனக்கொண்ணும் அப்படி தெரியலையே...! பிருதிவ்... எனக்கு இன்னும் ஒரு லார்ஜ் ஊத்து... சோடாவை கொஞ்சமா விடு...''

''சரிபாஸ்...''

செட்டில் மாத்திரைகளைப் போட்டு ஏற்கனவே கரைத்து வைத்திருந்த ஸ்காட்சை - லட்சுமி நாராயணின் டம்ளரில் ஊற்றி கொஞ்சமாய் சோடா கலந்தான்.

கமலம் சோபாவில் உட்கார முடியாமல் தள்ளாடினாள். தலை நேராய் நிற்க முயன்று முடியாமல் வலது பக்கமாகவும், இடது பக்கமாகவும் சட்சட்டென்று சாய்ந்தது.

''என்னங்க... என்னால முடியலை... போய் படுத்துக்கிறேன்... நீங்க சாப்பிட்டு வாங்க...'' மழலையாய் கொஞ்சிக்கொண்டே தடுமாற்றமாய் எழுந்து - படுக்கையறை நோக்கிப் போனாள் கமலம்.

''போ... போய்படுத்துக்கோ... நானும் இந்த ரவுண்டை முடிச்சுட்டு வந்துடறேன்...'' என்றவர் பிருதிவ் கலந்து வைத்த ஸ்காட்ச்சை எடுத்து உறிஞ்சினார்.

ஒரே மூச்சில் உறிஞ்சிவிட்டு -

நிமிர்ந்தார்.

தலைக்குள் எதுவோ 'விர்'ரென்று சுழன்றது.

எத்தனை ரவுண்ட் ட்ரிங்க் சாப்பிட்டாலும் கிடைக்காத சுழற்சி.

ஆரம்பத்தில் ஆனந்தமாக இருந்து அது போகப் போக அவஸ்தையாய் மாறியது. கண்களுக்கு மேல் எதுவோ பாரமாய் வந்து உட்கார்ந்து அமுத்தியது. எதிரே

உட்கார்ந்திருந்த பிருதிவ் மச மசவென்று தெரிந்தான்.

"பி... பி... பிருதிவ்..."

"என்னபாஸ்?"

"க... க... கமலம் சொன்னது... வா... வாஸ்தவம்தான்... இ... இ... இன்னிக்கி ஸ்காட்ச் ரொம்பவும் தீவிரமா இருக்கு.... எ... எ.... என்னாலேயும் மு... முடியலை... நா... நான் பெட்டுக்கு போறேன்... நீ கிளம்பு..." சொல்லிக் கொண்டே எழுந்த லட்சுமிநாராயணன் - நிற்கமுடியாமல் மறுபடியும் சோபாவில் விழுந்தார். கண்கள் ஒரு பக்கமாய் சொருகிக் கொள்ள - சாய்ந்தார்.

"பா... பாஸ்..." மனசுக்குள் வெற்றி விழாவை கொண்டாடிக் கொண்டே லட்சுமிநாராயணனைப் பிடித்து தூக்கினான் பிருதிவ். அவர் பேச முடியாமல் வாய் கோணினார்.

ஒரே நிமிஷம்!

நீளமான மயக்கத்திற்குப் போனார் லட்சுமிநாராயணன்.

பிருதிவ் எழுந்தான். பரபரவென்று செயல்பட ஆரம்பித்தான். படுக்கையறைக்குள் எட்டிப் பார்த்தான்.

கமலம் கால்களையும், கைகளையும் ஆக்டோபஸ் மாதிரி பரப்பிக் கொண்டு அசிங்கமாய் வாய் பிளந்து தூங்கிக் கொண்டிருந்தாள். இடுப்பிலிருந்த புடவைக் கட்டு விலகியிருக்க பாவாடையின் நாடா தெரிந்தது.

'நாளைக்குக் காலை பத்துமணி வரைக்கும் - இவர்களைப் பற்றின கவலை வேண்டாம்.' சோபாவில் சரிந்துகிடந்த லட்சுமிநாராயணனைத் தாண்டிக் கொண்டு டெலிபோன் அருகே வந்தான்.

ரிஸீவரை கையில் எடுத்துக் கொண்டு - மெரீன் ட்ரைவ் பங்களாவின் டெலிபோன் நம்பரை டயல் செய்தான்.

மறுமுனையில் ரிங் ஓடியது.

நான்கைந்து ரிங் ஓடிய பின் - ரிஸீவர் எடுக்கப்பட்டு ராம்தயாளின் முரட்டுத்தனமான 'ஹலோ' கேட்டது.

ஏற்கெனவே பலமுறை பேசிப் பழகியிருந்த லட்சுமி நாராயணனின் சன்னமான குரலில் பேச ஆரம்பித்தான் பிருதிவ். சுத்தமான மராட்டி.

"ஹலோ.... ராம்தயாளா...?"

"ஹாங்... பாஸ்...."



"பிருதிவ் அங்கே வந்தானா...?"

"வரலையே பாஸ்..."

"அப்படீன்னா இன்னும் கொஞ்ச நேரத்துல அவன் வருவான்... அனிதாவை அவன்கூட அனுப்பி வை..."

"சரிபாஸ்..."

"அனிதா... என்ன செஞ்சிட்டிருக்கா....?"

"தூங்கறா..."

"கவனமா பாத்துக்கோ..."

"சரிபாஸ்...."

ரிஸீவரை சாத்தினான் பிருதிவ். உதட்டில் ஒரு புன்னகை அரும்பியது.

லட்சுமி நாராயணனின் காரை எடுத்துக் கொண்டு மெரீன் ட்ரைவ் பங்களாவுக்கு வந்தபோது நேரம் 10.35.

மெரீன் ட்ரைவ் ஏரியா பூராவும் அந்நேரத்துக்கே வெறிச்சோடிப் போயிருந்தது. சமுத்திர இரைச்சல் மட்டும் அவ்வப்போது பாம்பின் சீறலாய் கேட்டுக் கொண்டிருந்தது.

பங்களாவின் - காலிங் பெல்லை அழுத்தி கதற வைத்தான்.

ராம்தயாள் உள்ளேயிருந்து தபதபவென்று ஓடி வந்து கதவைத் திறந்தான்.

பிருதிவ் சிரித்தான்.

"என்ன ராம்தயாள்... தூங்கிட்டியா...?"

ராம்தயாள் தலையைச் சொறிந்தான். பிருதிவ் உள்ளே வந்தபடி கேட்டான். "நான் வரப்போறதா பாஸ் போன் பண்ணியிருப்பாரே....?"

"ஆமா... பண்ணினார்..."

"என்ன சொன்னார்?"

"நீங்க வந்தா... அனிதாவை உங்ககூட அனுப்பி வைக்கச் சொன்னார்..."

"அனிதா என்ன பண்றா...?"

"தூங்கறா...."

பிருதிவ் உள்ளே போனான். "நீ அங்கேயே நில்லு ராம்தயாள்.... என்கூட வராதே... அனிதாகிட்டே நான் நைச்சியமா பேசி கூட்டிட்டு வர்றேன்..."

ராம்தயாள் அங்கேயே நின்று கொண்டான். பிருதிவ்

பங்களாவின் ஹாலைக் கடந்து - நான்கைந்து அறைகளைத் தாண்டி - அனிதா இருந்த அறைக்குள் வந்தான்.

''அனிதா''

குத்துக்காலிட்டு உட்கார்ந்து - முழங்கால்களுக்கு இடையே தலையைப் புதைத்திருந்த அனிதா விருட்டென்று நிமிர்ந்தாள், கைகளிலும் கால்களிலும் கட்டப்பட்டிருந்த இரும்பு வளையங்கள் கலகலக்க எழுந்தாள்.

''வந்துட்டீங்களா...?''

''இதுவரைக்கும் எல்லாமே சக்சஸ்...'' மெல்லிய குரலில் சந்தோஷித்தான் பிருதிவ்.

''ராம்தயாள் நம்பிட்டானா?''

''நம்பிட்டான்... நான் லட்சுமிநாராயணன் குரல்ல பேசினதை அப்படியே நம்பிட்டான். கமலமும் லட்சுமி நாராயணனும் நாளைக்கு காலைல பத்துமணிவரைக்கும் எந்திரிக்க மாட்டாங்க... செடட்டிவ் டேப்ளட்ஸை நிறையவே கலந்து குடுத்திருக்கேன்...''

''ஃப்ளைட் டிக்கெட் எடுத்திட்டீங்களா...?''

''ம்... எடுத்தாச்சு... கிளம்பு...'' சுறுசுறுப்பாய் - அனிதாவின் கைவிலங்குகளை அவிழ்த்தெறிய ஆரம்பித்தான் பிருதிவ்.

அதே விநாடி -

அடுத்த அறையில் காவலுக்காகப் படுத்திருந்த மல்லம்மாவின் காதுகளில் - பிருதிவ் பேசிய பேச்சு பூராவும் ஸ்பஷ்டமாய் விழ - அவள் பதட்டமாய் எழுந்து - ஹாலில் நின்றிருந்த ராம்தயாளை நோக்கிப் போனாள்.

## 8

அனிதாவின் கைவிலங்குகளை சுலபமாய் கழற்றி எறிந்து விட்டு, அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு வெளியே வந்தான் பிருதிவ்.

பங்களா பூராவும் நிசப்தமாய் இருந்தது. ஹாலில் இருந்த ட்யூப்லைட் மட்டும் பிரகாசமாய் எரிந்து கொண்டிருக்க, மற்ற அறைகளில் ஒருவித அரையிருட்



டுத்தனம் தெரிந்தது. அனிதா பார்வையை சுற்றும் முற்றும் அலைய விட்டுக்கொண்டே பிருதிவ்வை தொடர்ந்தாள்; மெல்லிய குரலில் கேட்டாள்.

''ராம்தயாளைக் காணோமே...''

''அவன் முன்னாடி ரூம்ல மேல் இருப்பான்... அனிதா.''

''நீங்க சொன்னதை முழுசுமா நம்பிட்டானா அவன்?''

''அவன் ஒரு மரமண்டை... எதையும் நம்பிடுவான்...''

ஹாலுக்குள் நுழைந்து ட்யூப்லைட் வெளிச்சத்தைக் கடந்து வேக வேகமாய் முன்புற அறைக்கு வந்தார்கள்.

வந்தவர்கள் சரக்கென்று யாரோ இழுத்துப் பிடித்த மாதிரி நின்றார்கள். மல்லம்மாள், உயரமான ராம்தயாளை குனிய வைத்து அவன் காதில் எதையோ சொல்லிக் கொண்டிருக்க, ராம்தயாளின் முகம் இருட்டிக்குப் போய்க் கொண்டிருந்தது. ஆத்திரத்தோடு நிமிர்ந்து மல்லம்மாவின் தோள்பட்டையைக் கப்பென்று பற்றினான். உறுமினான்.

''சச்?''

''ஹாங்... சச்பாத்யே... தேகோ... ராம்தயாள். தோனோ இதர் ஆயானா இன்காபாஸ் பூச்சோனா, ஹம் பார்சப் சச்சே...''

மல்லம்மா உறுதியான குரலில் சொல்லிக் கொண்டிருக்க ராம்தயாள் எதிரே வந்து கொண்டிருந்த பிருதிவ்வையும் அனிதாவையும் பார்த்தபடி முன்னால் வந்தான்.

பிருதிவ்வும் அனிதாவும் ஜாக்ரதையானார்கள். 'உஷார்' சொல்லிக் கொண்டு இருவரின் தேகம் பூராவும் ரத்தம் ஓடியது.

பிருதிவ் மெல்லிய குரலில் முனகினான்.

''அனிதா...''

''ம்...''

''நம்ம இரண்டு பேரும் இருந்த உற்சாகத்துல அடுத்த ரூம்ல இருந்த மல்லம்மாவை மறந்துட்டோம்... கடைசி நிமிஷத்துல விஷயம் தெரிஞ்சிடுச்சு...''

''இப்ப என்னங்க பண்றது...?''

''என் கூட சேர்ந்த மாதிரியே வா... அனிதா... பயப் படாதே...!''

ராம்தயாள் கண்களில் நெருப்பை நிரப்பிக் கொண்டு ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்தான். பிருதிவ் அவனை சிநேக பூர்வமாய்ப் பார்த்து புன்னகைத்துக் கொண்டே சாத்தியிருந்த கதவைத் திறக்கப் போனான்.

''டேரா பிருதிவ்!'' உலக்கை மாதிரி இருந்த தன் வலக்கையை நீட்டினான் ராம்தயாள்.

''க்யா ராம்தயாள்...?''

மராட்டியும், ஹிந்தியும் தொச்சையாய் கலந்த ஒரு பாஷையில் பிருதிவ்விடம் சம்பாஷிக்க ஆரம்பித்தான் ராம்தயாள்.

''இந்த பொண்ணை கூட்டிக்கிட்டு எங்கே போறே பிருதிவ்?''

''பார்ட்டி கிட்டே கூட்டிட்டு போகச் சொல்லியிருக்கார் பாஸ்!''

''எந்த பார்ட்டி...?''

''உன்கிட்டே அதையெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. கதவைத் தொறந்து விடு... நீ இப்படி என்னை மறிச்சு கேள்வி கேட்டுட்டிருக்கிற விஷயம் பாஸுக்கு தெரிஞ்சா உன்னோட சீட்டைக் கிழிச்சிடுவார்...''

''எனக்கு உம்மேல சந்தேகமா இருக்கு...!''

''என்ன சந்தேகம்...?''

''இந்த பொண்ணைக் கூட்டிக்கிட்டு நீ தப்பிக்கப் போறியாம். மல்லம்மா சொல்றா... நான் எதுக்கும் விஷயத்தை நம்ம பாஸுக்கு தெரியப்படுத்திட்டு அப்புறமா உன்னையும் இந்த பொண்ணையும் விடறேன்..'' ராம்தயாள் சொல்லிக்கொண்டே டெலிபோனை நோக்கிப் போனான்.

''ராம்தயாள்!''

பிருதிவ் கோபமாய் கத்தினான்.

''என்ன?'' போய்க்கொண்டிருந்த ராம்தயாள் நின்றான்.

''இதெல்லாம் உனக்கு அதிகப்படியான விஷயம்... மரியாதையா கதவைத் தொறந்துவிடு.... அந்த மல்லம்மா ஒரு செவிட்டு முண்டம்... அது பேச்சை கேட்டுக்கிட்டு நீ எங்களை நிறுத்தி வெச்ச விபரம் பாஸுக்கு தெரிஞ்சா



அவருக்கு சரியான கோபம் வந்துடும்...''

ராம்தயாள் தன் பான் கறை ஏறிய பற்களைக் காட்டிச் சிரித்தான். மொட்டையின் முன்பரப்பை ஆட்காட்டி விரலால் சொரிந்து கொண்டான்.

''பிருதிவ்...! நேத்தைக்கு ராத்திரியிலிருந்தே எனக்கு உம்மேல சந்தேகம். நீ தனியா போய் அவகிட்ட பேசினே. சாப்பிடமாட்டேன்னு அடம்பிடிச்சவ - நீ சொன்னதும் சாப்பிட்டா... என்னையும் மல்லம்மாவையும் பார்த்து பயப்பட்டுட்டிருந்த இந்தப் பொண்ணு - நேத்தையிலிருந்து பயமில்லாமே எங்களைப் பார்த்தா... மூஞ்சியில ஒரு சந்தோஷம் தனியா ஒட்டிட்டிருந்தது. என்னமோ நடக்கப்போகுதுன்னு நினைச்சேன்.... அதுப்படியே நடக்க ஆரம்பிச்சுடுச்சு... நான் எதுக்கும் பாஸை ஒரு வார்த்தை கேட்டுக்கிட்டு-''

டெலிபோனை நோக்கித் திரும்பினான், ராம்தயாள்.

''ஸாரி ராம்தயாள்...''

எதற்கு அவன் ஸாரி சொல்கிறான் என்று ஆச்சர்யப்பட்டு ரிஸீவரை எடுக்காமல் திரும்பிய ராம்தயாள் அதிர்ந்து போனான்.

பிருதிவ்வின் கையில் அந்த பிஸ்டல் -

கச்சிதமாய் மண்டி போட்டு உட்கார்ந்திருந்தது.

''பி...பி...பி... பிருதிவ்...யே... யே...க்யா... ஹை...!''

''யே... பிஸ்டல்... ஹை!'' பிருதிவ் சிரித்தான். ராம்தயாள் பிருதிவ்வின் கையிலிருந்த பிஸ்டலையே விழிகள் நிலைகுத்தப் பார்த்தான். மல்லம்மா சுவரோரமாய் ஒண்டினாள். பிருதிவ் அனிதாவிடம் திரும்பினான்.

''அனிதா....''

''என்னங்க...?''

''எம் பின்னாடியே வா... யாரைப் பார்த்தும் பயப்படாதே...ம்...வா... இப்படி... வா... வாசல் கதவு இந்தப் பக்கம்...'' பிருதிவ் சொல்லிக்கொண்டே வாசலை நோக்கிப் போனான்.

இருவரும் ராம்தயாளைப் பார்த்துக்கொண்டே பின்வந்து நகர்ந்து கதவருகே வந்தார்கள். ''அனிதா... தாழ்ப்பாளைத் திற...'' பிருதிவ் சொல்ல -

அனிதா கதவின் தாழ்ப்பாளைத் திறக்க முயன்றாள்.

அதே விநாடி...

"ர்ர்ர்ரப்...."

ராம்தயாள் விருட்டென்று கீழே குனிந்து - அருகேயிருந்த அந்த இரும்பு ஸ்டூலை எடுத்து பிருதிவ் மேல் வீசினான். அது ராட்க்ஷச வேகத்தில் பறந்து வந்து பிருதிவ்வையும் அவன் கையிலிருந்த பிஸ்டலையும் பிரித்தது.

"அனிதா...முன்னாடி ஓடு..."

பிருதிவ் பதட்டமாய் கத்த - அனிதா வாசல் கதவைத் திறந்து கொண்டு ஓட ஆரம்பித்தாள். பிருதிவ் அவள் பின்னால் பாய - ராம்தயாள் தன் காட்டெருமை உடம்போடு அவன் மேல் வந்து விழுந்து உருட்டினான்.

இருவரும் சத்தமில்லாமல் உருண்டார்கள்.

ராம்தயாளின் அகலமான உள்ளங்கை வேர்வையின் பிசுபிசுப்போடு பிருதிவ்வின் முகத்தில் பதிந்து அழுத்தியது.

"யே... கோல்மால் காம் ஹமாரா பாஸ் சல்தா நையே பிருதிவ்..." ராம்தயாள் ஆக்ரோஷமாய் சொல்லிக் கொண்டே அவன் முகத்தை அழுத்த ஆரம்பித்தான்.

பிருதிவ் திமிறினான். கத்தினான்.

"அனிதா - நீ ஓடிடு...அங்கே நிற்காதே..."

"நீங்க...?" திகிலோடு அவனைச் சுற்றி வந்தாள் அனிதா.

"நா... நா... இவனை... சமாளிச்சுட்டு வந்துடறேன்... நீ...நீ... மலபார் போலீஸ் ஸ்டேஷன்ல போய் இரு."

ராம்தயாளின் ஸ்டீல் கை பிருதிவ்வின் கழுத்துப் பகுதியில் இறுக்கமாய் பதிய பிருதிவ் மூச்சுத்திணறினான்.

"உன்னை உயிரோடு விட்டாத்தானே வெளியே போவே...?" இந்தியில் சொல்லி பற்களைக் கடித்தான் ராம்தயாள்.

பிருதிவ் - ராம்தயாளின் பிடியிலிருந்து தன்னை உருவிக் கொள்ள முயன்று ரொம்ப சீக்கிரத்தில் தோற்றுப் போனான். வியர்த்து திணறினான்.

"அ... அ... அனிதா... நீ... போ... போயிடு... நி...



நிக்காதே!.."

"நா... மட்டும்... எப்படி ஙக... போவேன்...?"

"சொ... சொன்னா... கேளு...அ...அனிதா... போ... போ... போயிடு... ஸ்டேஷன்ல போய்... இரு...."

"உங்களை விட்டுட்டு... நா... நான் போக மாட்டேன்... ரெண்டு பேரும் சேர்ந்தே வெளியே போவோம்..." அனிதா கத்தக் கத்த -

ராம்தயாள் பிருதிவ்வை கீழே உருட்டி - அவன் மேல் வசையாய் உட்கார்ந்து கையாள ஆரம்பித்தான். வலது கையால் கழுத்தை இறுகப் பற்றிக் கொண்டு - இடது கையால் நெஞ்சில் 'நெக்'கென்று இடித்தான்.

"ம்மா ஆ..."

வீறிட்டான் பிருதிவ்.

அதே மூர்க்கத்தோடு இன்னொரு அடி.

பிருதிவ்வின் கண்களில் வலி தெரிந்தது. தன் மேலே உட்கார்ந்திருந்த ராம்தயாளை கீழே உருட்ட முயன்றான். ராம்தயாள் அசைய மறுத்தான். அவனுடைய வலது கை விரல்கள் பிருதிவ்வின் கழுத்தை ஆக்கிரமாய் பிசைந்தது.

அனிதா பதறிப் போய் இரண்டு பேரையும் சுற்றிச் சுற்றி வந்தாள். ராம்தயாளின் தோள் பட்டையைப் பிடித்து இழுக்க முயன்று - அவன் அவளை உதற - பத்தடி தள்ளிப் போய் விழுந்தாள்.

'பிருதிவ் கையிலிருந்த பிஸ்டல் எங்கே?'

பரபரவென்று பார்வையைச் சுழற்றினாள்.

பிஸ்டல் தட்டுப்பட மறுத்தது.

ஆனால் - சுவரோரமாய் மூன்றடி நீளத்தில் கட்டை விரல் பருமனில் அந்த இரும்புக் குழாய் அவள் கண்ணில் பட்டது.

இரண்டே எட்டில் ஓடிப்போய் அதை எடுத்துக் கொண்டாள்.

ராம்தயாளை நோக்கி பாய்ந்து வந்தாள்.

பிருதிவ் மேல் உட்கார்ந்திருந்த ராம்தயாள் இந்த புது ஆபத்தைப் பார்த்ததும் கோபமானான். விநாடிக்கும் குறைவான நேரத்தில் விருட்டென்று எழுந்து - பாய்ந்து வந்த அனிதாவை எதிர் கொண்டான்.

தன் தலையைக் குறிவைத்து இறங்கிய இரும்புக்கம்பியைலாவகமாய்தடுத்துஅனிதாவைவலது காலால் ஒரு எத்து எத்தினான்.

அனிதா இலக்கில்லாமல் பறந்து சுவரோரமாய் உருண்டாள். ராம்தயாள் கம்பியை கையில் எடுத்துக் கொண்டுமூர்க்கமாய்உயர்த்தி- அனிதாவின்வயிற்றைக் குறிபார்த்து நடந்தான். அதே விநாடி -

கழுத்திலும் - நெஞ்சிலும் வலி 'வின் வின்' என்று தெறித்தாலும் - அதைப் பொருட்படுத்தாமல் தடுமாறிக் கொண்டு எழுந்தான் பிருதிவ்.

"ஹேய்...ராம்தயாள்...."

கத்திக்கொண்டே அவனுடைய கால்களை நோக்கி பாய்ந்து - அசைய விடாமல் பற்றிக்கொண்டான். அனிதாவைப்பார்த்துக் கத்தினான்.

"அனிதா....அவன் கையில்சிக்காதே... ஓடிடு..."

பிருதிவ்வை உதற முயன்றான் ராம்தயாள்.

"அனிதா... தயவு பண்ணி ஓடிடு..."

ராம்தயாள் இந்தியில்- கெட்ட வார்த்தையால் சொல்லி பிருதிவ்வின் பிடியிலிருந்து தன்னை உருவிக்கொள்ள முயன்றான். முடியாமல் போகவே-

ஆத்திரமானான்.

அனிதாவை நோக்கி உயர்த்திய கம்பியை - பிருதிவ்வின்பக்கமாய் திருப்பினான்.

"உடோ...பிருதிவ்..."

உறுமினான்.

பிருதிவ் உடும்புப் பிடியாய் அவன்கால்களைப் பற்றிக் கொண்டுகத்தினான். "அனிதா...நீ...போயிடு...என்னைப் பத்திக் கவலைப்படாதே. இவனோட கையில மாட்டிக் கிட்டா நீ உன்னோட வீட்டுக்கு திரும்ப முடியாது...."

ராம்தயாளின் கோபம் மூர்க்கமானது.

பிருதிவ்வை கால்களால் உதைத்து மல்லாத்தினான். கையிலிருந்த இரும்புக் கம்பியை ஆத்திரமாய் உயர்த்தி நெட்டுக்குத்தலாய் - சரக்கென்று பிருதிவ்வின் வயிற்றில் இறக்கினான்.

"ம்மாஆ...!"



பிருதிவ் தீனக்குரல் எழுப்ப - ரத்தம் பவுண்டன்மாதிரி சிவப்பாய்பீச்சியது. வயிற்றில் பதிந்தகம்பியைமறுபடியும் உருவினான் ராம்தயாள்.

இந்த தடவை கழுத்துப் பகுதியை குறி வைத்தான்.

"நோ..."

அனிதா வீறிட்டாள்.

அவளுடைய வீறிடலைப் பொருட்படுத்தாத ராம்தயாள் அந்த இரும்புக் கம்பியை தொண்டைக் குழியில் சுலபமாய் இறக்கினான்.

இன்னொரு பக்கம் வழி கிடைத்துவிட்ட சந்தோஷத் தில் ரத்தம் உற்சாகமாய் வெளியே வந்தது. பிருதிவ் துடிக்க ஆரம்பித்தான். கண்களை சிரமப்பட்டு அனிதா இருந்த பக்கமாய் திருப்பினான். பார்வையில் ஏராளமான கெஞ்சல்.

"போயிடு...அனிதா...தப்பிப் போயிடு..."

ராம்தயாள், உயிரை விட்டுக்கொண்டிருந்த பிருதிவ்வை கால்களினால் உதைத்து சுவரோரமாய் ஒரு குப்பை காகிதமாய் தள்ளினான்.

ரத்தத்தைப் பூசிக்கொண்ட இரும்புக் கம்பியோடும், வாய் நிறைய ஒரு சிரிப்போடும் அனிதாவின் பக்கமாய் திரும்பினான்.

தன் மேல் ஆபத்து வர்சனை பட்டதும் உஷாரானாள் அனிதா. அடுத்த விநாடியின் ஆரம்பத்தில் - குபீரென்று - ஒரே பாய்ச்சல். தாழ்ப்பாளைப் பிளந்து - படீரென்ற சத்தத்தோடு அந்தப் பெரிய சைஸ் இரட்டைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே பாய்ந்தாள்.

இருட்டில் தன்னைக் கரைத்துக் கொண்டு தபதபவென்று ஓட ஆரம்பித்தாள். வெளி வராந்தாவில் இருந்த தொட்டிகளின் மேல் மோதி - கீழே விழ முயன்று - பின் சமாளித்து - காம்பௌண்ட் கேட்டுக்கு வந்தாள்.

கேட் வெறுமனே சாத்தியிருக்க -

திறந்து கொண்டு ரோட்டுக்கு வந்து திரும்பிப் பார்த்தாள்.

இருபதடிக்கப்பால்-

ராம்தயாள் ஒரு வெறிபிடித்த மிருகம் மாதிரி ஓடி

வருவது இருட்டில் லேசாய் தெரிந்தது.

அனிதா வேகத்தை அதிகப்படுத்தினாள்.

மெரீன் ட்ரைவ் ரோட்டின் இரண்டு பக்க சோடியம் வேப்பர் விளக்குகள் எந்தக் காரணத்தாலோ கண்களை மூடியிருக்க - அந்த பிராந்தியம் பூராவும் இருட்டு ஏறியிருந்தது. தொலைவில் தெரிந்த கடல் கறுப்பாய் அசைந்தது.

அனிதாவின் விலாப் பகுதிக்குள் இருதயம் பயத்தில் எம்பிக் கொண்டிருக்க - ஏராளமான வியர்வையோடு - சேலையை கணுக்காலுக்கு மேல் உயர்த்திப் பிடித்துக்கொண்டு ஓடினாள்.

பெரிது பெரிதாய் மூச்சிரைத்தாள்.

திரும்பிப் பார்க்கும்போதெல்லாம் - மூர்க்கமாய் ஓடி வரும் ராம்தயாள் தெரிந்தான் - ரோடு நீளமாய் இருட்டிலேயே போய்க் கொண்டிருந்தது.

'கடவுளே! நான் எப்படி தப்பிக்கப் போகிறேன்?'

இரும்புக்கம்பியால் குத்தப்பட்டு ரத்தம் பீறிட்டு துடித்த பிருதிவ் மனசின் மையத்துக்கு வர - துக்கம் ப்ளக்கென்று உடைந்து கண்களில் நீர் சுறுசுறுவென்றது.

'ஊ... ஹூம்... இப்போது அழக்கூடாது...! அழுதால் ஓட முடியாது... அந்த தளர்ச்சியில் எங்கேயாவது விழுந்து விடுவோம்... முதலில் தப்பிக்க வேண்டும்....'

'ஆ'வென்று பிளந்த வாயோடு, கடல் காற்றை ஏராளமாய் சுவாசித்துக் கொண்டு இன்னும் வேகமாய் ஓடினாள் அனிதா.

''தப்... தப்... தப்...''

பின்னால் காலடிச் சத்தம் வேகமாய் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

ராம்தயாள் இப்போது வேகத்தைக் கூட்டியிருந்தான்.

அவன் வந்து கொண்டிருந்த வேகத்தைப் பார்த்தால் இன்னும் ஐந்து நிமிஷ ஓட்டத்துக்குள் அனிதா அவன் கைகளுக்குள் பிடிபட்டு விடுவாள் போல் தோன்றியது.

பயத்தில் கால்கள் துவண்டன அனிதாவுக்கு.

ரோடு நிசப்தமாய் இருக்க 'யாராவது தென்பட



மாட்டார்களா?' என்ற நப்பாசையோடு பார்வையைச் சுழற்றிக் கொண்டே ஓடினாள்.

''தப்... தப்... தப்...''

ராம்தயாளின் பூட்ஸ் சத்தம் வெகுவாய் சமீபித்தது.

அவன் எரிச்சலோடு கத்தினான்... 'ஏய்... டேரா...''

அனிதா திடீரென்று ரோட்டின் எதிர்ப்பக்கத்திற்கு ஓட்டத்தை மாற்றினாள். சற்று திகைத்துப்போன ராம்தயாள், சுதாரித்துக் கொள்வதற்குள் அனிதா எதிர் பிளாட்பாரத்தில் ஓடி ஒரு காம்பௌண்ட் சுவரின் சின்ன இடைவெளிக்குள் நுழைந்தாள்.

ராம்தயாள் அதிர்ந்தான்.

அந்த காம்பௌண்ட் சுவர்க்குப் பின்னால் -

ஒரு புறநகர் ரயில்வே ஸ்டேஷன் இருப்பது அவனுடைய ஞாபகத்திற்கு வந்தது. அவள் அந்த ஸ்டேஷனைத் தொட்டுவிட்டால் நிச்சயம் தப்பி விடுவாள்.

அதற்கு முன்னால் அவளை மடக்க வேண்டும்.

ராம்தயாள் தன் காட்டெருமை உடம்பில் வேகத்தைக் கூட்டினான். எதிர்ப்புற பிளாட்பாரத்தைத் தொட்டு - அந்த காம்பௌண்ட் சுவரின் இடைவெளியில் நுழைந்தான்.

கொஞ்சம் தொலைவில் -

அந்த புறநகர் ஸ்டேஷன் ட்யூப் வெளிச்சத்தோடு தெரிய - எலக்ட்ரிக் ட்ரெயின் ஒன்று நின்றிருப்பது தெரிந்தது.

அதை நோக்கி ஓடிக்கொண்டிருந்தாள் அனிதா.

''தப்... தப்... தப்...''

ஏதோ கட்டிட வேலை நிர்மாணங்கள் சகிதம் - பாதி கட்டப்பட்ட ஒரு பங்களா, ஆட்கள் இல்லாமல் நிசப்தமாய் தெரிய - அதைக் கடந்து ஓடினாள்.

ஸ்டேஷனின் வெளிச்சம் நெருங்கிக் கொண்டிருந்தது.

'கடவுளே...! இன்னும் ஐம்பதடி தான்... அவனோட கையில் மாட்டிக்காமே என்னைக் கொண்டு போய் சேர்த்துவிடு!'

எலக்ட்ரிக் ட்ரெயின் 'ப்ராங்க்' என்று கூவியது.

வேக வேகமாய் மூச்சிரைத்து - நுரையீரல்கள் வலியால்

பம்ம - வலியை ஜீரணித்து - கண்கள் சோர சோர ஓடினாள் அனிதா.

இன்னும் நாற்பதடி.

ட்ரெயின் மறுபடியும் 'ப்ராங்க்' என்றது.

முப்பது அடி...

ஓடினாள் அனிதா.

'ப்ராங்க்...'

இருபது அடி...

ரயில் நகர ஆரம்பித்தது.

அனிதா உடம்பு பலம் பூராவையும் கால்களுக்குக் கொடுத்து - எதிரே வந்த ரயில்வே வேலிபரப்பைத் தாண்டி - தண்டவாளங்களில் ஓடினாள்.

எதிரே சிவப்பும் பச்சையுமாய் ஏகப்பட்ட ரயில்வே சிக்னல்கள். பிளாட்பாரத்தில் தெரியும் சொற்ப ஜனக்கூட்டம். நகரும் ரயில். தண்டவாளத்தின் ஓரமாய் கால்களை நெருக்கும் கம்பி நேர்க்கோடுகள்.

எல்லாமே கண்ணில் பட்டுப் பட்டு மறைய - அனிதா நகர்ந்து கொண்டிருந்த ரயிலை நோக்கி ஓடினாள்.

இதோ -

இன்னும் பத்தடி தான்.

பாய்ந்தாள் அனிதா.

ரயில் பெட்டிக்கு வெளியே தெரிந்த அந்த கைப்பிடியை அசுரத்தனமாய் பற்றிக்கொள்ள - ரயில் சுலபமாய் அவளை இழுத்துக் கொண்டு போயிற்று.

திரும்பிப் பார்த்தாள்.

ராம்தயாள் ஆவேசமாய் வந்து கொண்டிருந்தான்.

மொட்டைத்தலையில் வியர்வை ஆறாய் கொட்டிக் கொண்டிருந்தது.

அனிதா - மெல்ல - மெல்ல - படிகளில் ஏறிப் பெட்டிக்குள் போனாள். கம்பார்ட்மெண்ட் காலியாக இருந்தது.

உள்ளே ஓடினாள்.

'ஒருத்தராவது இருக்க மாட்டார்களா என்ன?'

இன்னும் நடந்தாள்.



கம்பார்ட்மெண்டின் கடைசி சீட்டில் அந்த இளைஞன் தெரிந்தான்.

மோவாயில் - தாடி வைத்து - தோளில் ஜோல்னா பை மாட்டியிருந்தான். ஜன்னல் கம்பியில் மோவாயைப் பதித்து வெளியே நகரும் பிளாட்பாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஸார்...''

ஓடிப்போய் அவனருகே நின்று கையைக் கூப்பினாள் அனிதா. ''என்னை ஒருத்தன் தொரத்திட்டு வாறான்... காப்பாத்துங்க ஸார்...''

அவன் நிமிர்ந்தான்.

ஆச்சர்யப்பட்டான். விருட்டென்று எழுந்தான். உதடுகள் வியப்பில் பிரிந்தன.

''அனிதா... நீயா...?''

அனிதா குழப்பமாய் அவனைப் பார்க்க - அடுத்த விநாடியே தாடிக்குள் இருந்த முகம் அடையாளம் தெரிந்தது. சந்தோஷக்கத்து கத்தினாள்.

''ரமேஷ்...'' அதிர்ந்து திடீரென்று அழுதாள் அனிதா.

''நானேதான்'' - அவன் மெல்லச் சிரித்தான். ''என்ன இப்படி ஓடி வர்றே அனிதா...? என்னாச்சு...?''

''ரமேஷ்... என்னை ஒருத்தன் தொரத்திட்டு வர்றான்...''

''யாரவன்...?''

ரயிலுக்கு வெளியே தண்டவாளத்தோடு ஓடிக் கொண்டே கம்பார்ட்மெண்டின் கதவைப் பிடிக்க முயற்சி செய்யும் ராம்தயாளை காட்டினாள், அனிதா.

ரமேஷ் ஓடிப்போய்ப் பார்த்தான்.

ரயிலுக்கு இணையாய் ஓடிக்கொண்டே - ராம்தயாள் கதவுப் பிடியைப் பற்ற எத்தனித்தான். இரண்டு தடவை தவறவிட்டு மூன்றாவது தடவை பிடியைப் பற்றிக்கொண்டான்.

கம்பார்ட்மெண்டின் - உள்ளே வர முயற்சித்து உடலை எம்பினான்.

ரமேஷ் அனிதாவைப் பார்த்தான்.

''அனிதா... யாரவன்?''

''எல்லாமே அப்புறம் சொல்றேன் ரமேஷ்... மொதல்ல அவனை உள்ளே வரவிடாமே பண்ணுங்க... போய் கதவைச் சாத்துங்க...''

ரமேஷ் கதவை நோக்கிப் போனான்.

அதே விநாடி -

''தத்த்த்தட்ட்ட்'' என்ற ஒரு சத்தம்.

அனிதா தலையை உயர்த்த அந்த பயங்கரம் நடந்தது.

கம்பார்ட்மெண்டின் கதவுப் பிடியைப் பற்றிக்கொண்டு உள்ளேவர முயற்சித்துக் கொண்டிருந்த ராம்தயாளின் உடம்பை ரயில்வே ட்ராக் ஓரமாய் நின்றிருந்த அந்த சிக்னல் போஸ்ட் செமத்தியாய் மொத்தி உருட்டியது.

''மா... ஆ... ஆ... ஆ...''

ஏராளமான அலறலோடு இருட்டில் விழுந்தான் ராம்தயாள். ஓடிப்போய் - அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தான் ரமேஷ்.

ரயில் தண்டவாளங்களைத் தேய்த்துக் கொண்டு நிற்க ஆரம்பித்தது.

போலீஸ் ஸ்டேஷன்.

மஞ்சள் தொப்பி அணிந்த இன்ஸ்பெக்டரிடம் எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள் அனிதா. நடுநடுவே அழுதாள். ரமேஷ் மோவாயைத் தாங்கி அவளருகே உட்கார்ந்திருந்தான். கண்களிலும் நீர் ததும்பியது.

அவள் சொல்லி முடித்த அரைமணி நேரத்திற்குள் - மயக்கத்திலும், போதையிலும் இருந்த கமலமும் லட்சுமிநாராயணனும் கைது செய்யப்பட்டார்கள்.

'ஏராள' ரத்தத்தோடு செத்துக்கிடந்த பிருதிவ் உடலையும் ரயில்வே சிக்னல் போஸ்டில் அடிபட்டு செத்த ராம்தயாள் உடலையும் போஸ்ட் மார்ட்டம் செய்யக் கொண்டு போனார்கள்.

விளக்கமாய் ஒரு ஸ்டேட்மெண்டை எழுதிக்



கொடுத்துவிட்டு ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்கள் அனிதாவும் ரமேஷும்.

ரமேஷ் குரல் தழுதழுத்தான்.

''அனிதா...! மும்பையோட இணைஞ்ச வாழ்க்கையை மையமா வெச்சு ஒரு நாவல் எழுதத்தான் இங்கே வந்தேன்... நீ எனக்கு இல்லேன்னு ஆனதுமே மனசு வெறுத்துட்டேன். இன்னொருத்தன் கையால் நீ தாலி கட்டிக்கிறதைப் பார்க்க எம் மனசுக்கு திடம் இல்லாததினாலதான் உன்னோட கல்யாணத்துக்கு நான் வரலை... நீ எங்கேயிருந்தாலும் அமோகமா வாழ்ந்திட்டிருப்பேன்னு நினைச்சேன்... இப்படி ஏமாந்திட்டியே அனிதா...''

அனிதாவின் விழிகளில் நீர் நிறைந்து 'பிளக்' என்று கன்னங்களில் உருண்டது. அவளுக்கு பிருதிவ்வின் ஞாபகம் வந்தது.

ரத்தம் சொட்ட - இரும்புக்கம்பி சொருகினவயிற்றோடு - கண்கள் சோரப் பார்த்து - அந்த உயிர் பிரியும் நேரத்திலும் 'போயிடு... அனிதா... என்னைப் பத்தி கவலைப்படாதே... நீ தப்பிச்சு போயிடு' என்று அவன் சொன்ன வார்த்தைகள் மனசுக்குள் பாரமாய் உட்கார்ந்திருந்தன.

அந்த பாரத்தைத் தாங்க முடியாமல் -

வாய்விட்டு மெலிதாய் அழ ஆரம்பித்தாள் அனிதா.

அவளை அழவிட்டு - ஒன்றும் பேசாமல் மௌனமாய் கூடவே நடக்க ஆரம்பித்தான் ரமேஷ்.

மும்பையின் நிசப்தமான தெரு அவர்களை கழிவிரக்கத்தோடு பார்க்க - அந்த இரவு விடியலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

★ (முற்றும்) ★

---

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷன்ஸ் அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி. அசோகன். முகவரி: 6/335, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.

ஆசிரியர்: ஜி. அசோகன். தொலைபேசி: 8544294.